உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௬]   கீலக௵ ஆவணிமீ   [பகுதி-௧௦.

பாண்டியர்களும் தமிழ்ப்புலவர்களும்.

பாகம் 1.

இம்மாதம் சாஸனபரீக்ஷகர் தம்முடைய வருஷாந்தர அறிக்கையை வெளியாக்கினார்கள். 1 அதில் பாண்டிய சரித்திரத்திற்கும், தமிழிலக்கியத்துக்கும் மிகப்பயன்படத்தக்க விஷயங்கள் பல உள. அவைகளைச் சுருக்கமாக அடியில் கவனிப்போம்.

இன்னவிடத்திற் கிடைத்ததென்று விளங்காத் தாமிரசாஸனமொன்றன் காகிதப்பிரதியினின்றும், ஸ்ரீமாந்- வெங்கையரவர்கள் பாண்டியவமிச விருத்தாந்தங்களை விரிவாக எழுதியதில், அச்சாஸநம், வேள்விகுடி என்னும் கிராமமானது வெகுகாலமாய் கொற்கைகிழான் நற்கொற்றனென்பவன் வர்க்கத்தாராலனுபவிக்கப்பட்டுப்பின்புஒருகாலத்து அவர்களைவிட்டு நழுவி இராஜாங்கத்தாராற் கைப்பற்றப்பட்டதென்றும், அச்சந்ததியானும் கூடல்நாயகர் முன் பண்பாடுபவனுமான ஒருவன், அன்றாளும் அரையனாகிய நெடுஞ்சடையனென்பானிடம் முறையிட்டுத் தனக்குள்ள ஆதாரங்களைக் காட்டி, மறுபடியும் பெற்றானென்றும் கூறுவதாகத் தெரியவருகிறது. 2

இச்சாஸநம் இருகூறாயுள்ளது. முன்னது கிரந்தாக்ஷரத்தில் சம்ஸ்கிருதபாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. பின்னது வட்டெழுத்தில் தமிழ்ப்பாஷையிலுள்ளது. சம்ஸ்கிருதபாகத்தில் நெடுஞ்

(1) Annual Report of the Assistant Archaeological Superintendant for Epigrapy for the year 1907—8.

(2) An Rep. for 1907—8. p. p. 62-68.

சடையன் முன்னோர்களில், அவன் தந்தை, பாட்டன், முப்பாட்டன் என்னும் மூன்றுதலைமுறையார்களைமட்டும் குறித்திருக்கிறது. இப்பாகத்தின் முதலில், பாண்டியவமிசத்துக்கு ஆதியில் ஆசாரியஸ்தானம் வகித்தவர் அகஸ்தியமகரிஷியென்றும், யுகாந்தரத்தால் மூன்றுலோகங்களும் பிரளயத்திலழிந்தகாலத்தும் பாண்டியவரசன் அழிந்து ஒழியவில்லையென்றும், பிறகு பிரமன் சிருஷ்டியாரம்பஞ்செய்கையில், தன்னால் உண்டாக்கப்பட்ட பிரஜைகளை ரக்ஷிக்கும்படி பாண்டியனை ஏற்படுத்த, அவன் **புதன்** என்னும்பெயரால் சந்திரன் மகனானென்றும் கூறப்பட்டுள்ளது. இவன்மகன் **புரூரவஸ்.** பிறகு மேருவில் கயல்பொறித்ததும், இந்திரனுடன் அவனாசனத்திலிருந்து, அவன் மாலையையணிந்து உடனுண்டதும், தைத்திய ராஜனைச்சயித்ததும், தேவர்கட்காகத் தூதுசென்றதும், திருப்பாற்கடலைக்கடைந்ததும் என்னும் பாண்டியவமிச சம்பந்தமான கதைகளையும் விஸ்தரிக்கின்றது.

அகஸ்தியரால் பட்டாபிஷேகஞ்செய்யப்படும் பாண்டியவமிசத்தில், **மாறவர்ம்ம**னென்பவன் அவதரித்தான். அவன் துலாபாரஞ்செய்துகொண்டு, அப்பொன்னை சாஸ்திரோக்தமாய் எல்லோருக்கும் தானஞ்செய்தான். இம்மாறவர்ம்மன் மகன் **ரணதீரன்.** அவன்மகன் **மாறவர்ம்மனாகிய ராஜசிம்மன்.** இவன் **பல்லவமல்லனென்னும்** பல்லவ அரசனைத்தோற்கடித்தான். ராஜசிம்மன் ஹேமகர்ப்பமும், துலாபாரமும் செய்துகொண்டான். இவன் மனைவியோர் மாளவசக்கரவர்த்தியின் மகள். இவளிடத்து இவ்வரசனுக்கு **ஜடிலவர்ம்மனென்**றோர் மகன் பிறந்தான். இவன் கலியுகத்தையும் கிருதயுகம்போலாக்கிவிட்டான். இவனுக்குப் பராந்தகன் என்னும் மறுபெயருண்டு.

இப்பிரகஸ்தி வரோதயபட்ட சர்வகிருதுயாஜியினால் எழுதப்பட்டதென்று இப்பாகத்தின் இறுதியில் வரைந்துள்ளது.

தமிழ்ப்பாகத்தின் முதலில், கொற்கைகிழான் நற்கொற்றன் என்பானுக்கு முன்னாள் பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி என்னும் பாண்டியவரசன் வேள்விகுடியென்ற கிராமத்தைத் தானம் செய்தானென்றும், அக்கிராமத்தைச் சிலகாலமனுபவித்தபின்னர், பா

ண்டியாதிராஜன் களப்பிரதேசத்தரசனால் வெல்லப்பட்டு நாடிழந்த
காலத்து, வேள்விகுடியையிழந்தான் என்றுங் கூறப்பட்டிருக்கிறது.
பிறகு பாண்டியகுலாப்தியில் இளஞ்சூரியனைப்போன்று, பூமாதே
விக்குத்தனிநாயகனாய்க் **கடுங்கோனென்னுமரசன்** ஜனித்தான். இவ்
வரசனுக்கு, ஸ்ரீதேவிக்குப் பர்த்தாவென்னலாம்படியான, **அவனிசூ
ளாமணி** யென்னும் **அதிராஜமாறவர்ம்மன்** மகனாகப்பிறந்தான். இவ்
வரசனுக்கு ஒப்பற்ற புகழ்படைத்த **செழியன்சேந்த**னென்றோர் மக
னுண்டானான். அவனுக்கு, உதயாத்திரியினுதிக்கும் சூரியனைப்போ
ல, நாற்றிசையும் தன்னாணைக்கஞ்சும்படி **மாறவர்ம்மனாகிய அரிகே
சரி அஸமஸம**னென்றோர் புதல்வன்பிறந்தான். இவன், **வில்வேலி**
என்னுமரசனுடைய கடல்போன்று பரந்த சேனையை நெல்வேலிக்
களத்தில் தோற்கடித்தான். இஃதன்றி, கேரளவரசனையும் சயித்து,
உலகத்திலேகநாயகனாயரசாண்டு, பன்முறை துலாபாரம் இரணிய
கர்ப்ப முதலிய மகாதானங்களைச் செய்தான். இம்மாறவர்ம்மன்
மகன் **கோச்சடையனென்**பான். இவனைத்தென்னன், வானவன்,
சோழன், செம்பியன், மன்னவர்மன்னன், இனியகர்னாடகன், கொ
ங்கர்கோமான் என்று பலவகையால் இச்சாஸநம் புகழ்கின்றது.
இவ்வரசன் **மருதூர்** என்னுமிடத்தில் நடந்ததோர் போரிலே சயி
த்ததுமன்றி, மகாரதனை **மங்கலபுரத்தில்** தோல்வியடையச் செய்தா
ன். இவன் மகன் **தேர்மாறனென்பான்.** இவன் நெடுவயல், கறு
மடை, மண்ணிக்குறிச்சி, திருமங்கை, பூவலூர், கொடும்பாளூர்,
பெரியலூர் முதலியவிடங்களில் நடந்த யுத்தங்களில் வெற்றிபெற்ற
வன். அன்றிக் **குழும்பூர்** என்னுமிடத்தில் இவனால் **பல்லவன்** மு
றியடிக்கப்பட்டான். காவேரியைக்கடந்து, மழகொங்கத் தரசனை
வென்று, பின்னும் வடக்கேயேகி, பாண்டிக்கொடுமுடியி லமர்ந்து
ள்ள பசுபதியைத்தொழுது, பல பொற்குவைகளையும், ஆபரணங்க
ளையும் அளித்து; கோசஹஸ்ரம், துலாபாரம், இரணியகர்ப்பம் முத
லிய தானங்களைச்செய்து, தேர்மாறன் வாழ்ந்துவந்தான். இத்
தேர்மாறன் கூடல், வஞ்சி, கோழி என்னு மூன்று பட்டணங்க
ளின் சுவர்களைப் பலப்படுத்தினனென்றும் சொல்லப்படுகிறான்.

இம்மன்னவன் மகன் தென்னவன் வானவன் நெடுஞ்சடைய
னென்பான். இவன் **பெண்ணாகடத்தில்** காவிரியின் தென்பால்

காடவனையும், நாட்டுக்குறும்பில் குறும்பரையும் அபஜயப்படுத்தினான். இவன், ஸ்ரீவரன், ஸ்ரீ மனோஹரன், சினச்சோழன், புனப்பூழியன், வீநகல்மஷன், விநயவிச்சுருதன், விக்கிரமபாரகன், வீரபுரோகன், மருத்பலன், மான்யசாஸனன், மனூபமன், கண்டகநிஷ்டூரேன், காரியதக்ஷிணன், கார்முகபார்த்தன், கிருதாபதானன், கலிப்பகை, கிருபாலயன், பண்டிதவத்சலன், பராந்தகன், பரிபூர்ணன், பாபபீரு, கிருஸ்திரன், நிதகின்னரன், மர்த்திதவீரன், என்னும்பல வகைப்பட்ட விருதுகளையுடையவன். இவ்வரசன் ஆட்சியின் மூன்றுமாண்டில் கூடலின்கோயிலில் பாடுமவன், ஒருநாள் மனநொந்து, அரசன்பாலேகி, "சய! முன்னாள் பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதியாகிய பரமேச்வர சக்கிரவர்த்தியால் என் முன்னோர்க்கு பாகனூர்க்கூற்றத்து வேள்விகுடியென்னும் கிராமமானது தானமாய்க்கொடுக்கப்பட்டது. அது, பாண்டிநாட்டுற்ற களப்பிரவரசனால் மறுபடியும் கவர்ந்துகொள்ளப்பட்டு இதுகாறும், இராஜாங்கத்தார் வசமே நின்றுவிட்டது. அதனை என் வசமாக்கல்வேண்டும்" என்று விண்ணப்பஞ்செய்ய, அரசன் இக்கூற்றினுண்மைதெரிந்து, அப்படியேசெய்கவென்ன, கரவந்தபுரத்துவைத்திய குலத்திற்றோன்றிய மூவேந்தமங்கலப்பேரரையன் என்னும் மாறங்காரியின் ஆணத்தியால் வேள்விகுடி மறுபடியும் மேற்கூறிய பாணனுக்கே கொடுக்கப்பட்டது. இச்சாஸனத்தின் தமிழ்க்கூறு சேனாதிபதி ஏனாதியாகிய சாத்தனால் எழுதப்பட்டதென்றும் தெரியவருகிறது. சாஸனத்தின் இறுதியில் ஆணத்தியார் பெயர் மதுரகவியென்றும், இவர்க்கு மங்கலராஜனென்னும் மறுபெயரொன்றிருந்ததென்றும், இவர் சாஸ்திரவித்து, கவி, வாக்மியென்றும் வர்ணிக்கப்பட்டுள்ளார். இவர் ஊர் கரவந்தபுரம்; குலம் வைத்தியகுலம். -இச்சாஸநத்தைப் பதிப்பித்தோன்பெயர் யுத்தகேசரி பெரும்பணைக்காரனென்பது. சாஸனத்தின் இறுதியில் நான்கு சுலோகங்கள் காணப்படுகின்றன. அவை வைஷ்ணவதர்மத்தினின்றும் எடுக்கப்பட்டனவென்று கூறியிருக்கிறது. இவை தான் சாஸநத்திற்கண்ட சமாசாரங்கள். இவைகளைக்கொண்டு ஸ்ரீமாந் - வெங்கையரவர்கள் பாண்டியவம்ச விருக்ஷத்தை அடியில்வருமாறு வரைந்துள்ளார்கள்:—

பாண்டியாதிராஜன் பரமேசுவரன் பல்யாகமுதுகுடுமிப்பெருவழுதி.

⋮

களப்பிர அரசன் ஆக்கிரமித்தது.

⋮

1. கடுங்கோன் பாண்டியாதிராஜன்.

|

2. அதிராஜன் மாறவர்ம்மன் அவனிசூளாமணி.

|

3. செழியன்சேந்தன்.

|

4. மாறவர்ம்மன், அரிகேசரி, அஸமஸமன்; நெல்வேலியில் வில்வெலியை வென்றவன்.

|

5. கோச்சடையன்ரணதீரன்; மருதூர்ப் போர்வென்றவன்; மகாரதனை மங்கலபுரத்தில் ஜயித்தவன்.

|

6. அரிகேசரிபராங்குசன், மாறவர்ம்மன், தேர்மாறன்; பல்லவனைக்குழும்பூரில் வென்றவன்; பல்லவர்களைச் சங்கரமங்கையில் தோற்கடித்தவன்; ராஜசிம்மன் (I); பல்லவமல்லனை அபஜயப்படுத்தியவன்; கூடல், வஞ்சி, கோழி என்னு மிராஜதானிகளின் சுவர்களை புதிப்பித்தவன்.

|

7. ஜடிலவர்ம்மன், நெடுஞ்சடையன், பராந்தகன்; காடவனைப்பெண்ணுகடத்தில் முறியடித்தவன். (வேள்விகுடி சாஸனத்தில் கூறப்பட்டுள்ளவன்.) கி. பி. 769-70.

|

8. ராஜசிம்மன் (II).

|

9. வரகுணமகாராஜன்: ஜயந்தவர்ம்மன் ?

|

10. ஸ்ரீமாறன், ஸ்ரீவல்லவன், ஏகவீரன், பரசக்கிர கோலாகலன்; மாயபாண்டியனையும், கேரளனையும், பல்லவனையும், வல்லபனையும் ஜயித்தவன்; பல்லவபஞ்சனன்.

11. வரகுணவர்ம்மன், பட்டந்தரித்தது. கி. பி. 862-3.

12. பராந்தகன், வீரநாராயணன், சடையன், கரகிரியில் செருச் செய்தவன், பெண்ணைகடத் தையழித்தவன்; வானவன் மகாதேவியை மணந்தவன்; சடிலன், நெடுஞ்சடையன். (மதராஸ்காட்சிச்சாலையிலுள்ள தாமிரசாஸனத்திலும், சின்னமனூர்ச் சாஸனத்திலும்கூறப்பட்டுள்ளவன்).

13. ராஜசிம்மன் (III) மந்தரகௌரவன், அபிமானமேரு.

இவ்விருக்ஷத்தில் பற்பல தவறுகளுண்டென்பதும், அது வேள்விகுடிச் சாஸனமோ, அன்றிச் சின்னமனூர்ச் சாஸனமோ சரியாய் வாசித்துணராததின் காரணத்தால் நேர்ந்திருக்கவேண்டுமென்பதும் நன்குவிளங்கும். மதராஸ் காட்சிச்சாலைச்சாஸனத்திலே கூறப்பட்ட தானகர்த்தா ஜடிலவர்ம்மன் (நெடுஞ்சடையன்) பண்டிதவத்ஸலன், வீரபுரோகன், விக்கிரமபாரகன், பராந்தகன், கண்டகசோதனைசெய்பவன், என்னும் பெயர்களைத்தரித்திருந்தானென்று முன்னரே சொல்லியிருக்கிறோம். 3 ஸ்ரீமாந் - வெங்கையரவர்கள் ஊகத்தின்படி அவர் தந்திருக்கும் விருக்ஷத்தின் 12-ம் அரசனாகிய ஜடிலனே இவனாயின், இவனுக்கு இவ்வளவு பெயர்களுமிருக்கவேண்டுமே? சின்னமனூர்ச் சாஸனத்தில் மாறவர்ம்மன், அரிகேசரி, அஸமஸமன் என்பவனே பராங்குசனென்னும் பெயருமுடைத்திருந்தானென்று சொல்லியிருக்க ஐயரவர்கள் இவனை 6-ம

(3) செந்தமிழ்த் தொகுதி 4, பக்-335

வனுக்கி, தேர்மாறனென்பவனோடு ஐக்கியப்படுத்துகிறார். சங்கரமங்கையில் செற்றவனும் அஸமஸமன் பராங்குசனே. பெண்ணுகடத்தில் காடவனைவென்ற அரசர்கள் ஐயரவர்கள் கருத்தின்படி இருவராவார்கள்; அதாவது 7, 12-ம் பெயர்கள். அரகேசரிமாறவர்ம்மர்களிருவர், பெண்ணுகடத்தில் காடவர்களை வென்றவர்களிருவர், என்பன போன்றவைகளிரட்டித்து வருவதையும்; பல்லவபஞ்சனனென்று கூறப்படும் அரிகேசரி பராங்குசனை (4) 10-வது ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபனோடு ஐக்கியப்படுத்தியும் ஒன்றற்கொன்று சம்பந்தமில்லாமல் கூறியிருப்பதைக்காணில், எவ்விடத்தோபொருள் கொள்வதில் தவறுநேர்ந்திருக்கிறது என்பது எம்துணிவு. எமக்குத்தோன்றுவது அடியில் வருவதே:—

சாஸனம் நன்குபுலப்படாதவரை இரண்டு அரிகேசரிகளையும் ஒருவராய்க்கொள்வதுடன், இரண்டு கோச்சடையர்களையும் (5,7) ஒருவராகக்கொள்ளல்வேண்டும். ஏழாமவனாகிய ஜடிலவர்ம்மனே வேள்விகுடி, சின்னமனூர், மதராஸ்காட்சிச்சாலைமுதலிய தாமிரசாஸனங்களிலும், திருப்பரங்குன்றம், திருவனந்தபுரம், கழுகுமலை முதலிய விடங்களின் கற்சாஸனங்களிலும் கூறப்பட்டவன்; 12-வனல்லன்: அரிகேசரி பராங்குசனே பல்லவபஞ்சனனென்னப்பட்டவன்; 10-வது ஸ்ரீவல்லபனல்லன். மூன்றுவது ராஜஸிம்மன் சோழபராந்தகன் I-மவனுடைய சமகாலத்தானல்லன். இவன் காலத்தான் ஏகவீரன் ஸ்ரீவல்லபனாகவேண்டும். இவனுக்கு இராஜஸிம்மனென்று பெயருமிருந்திருக்கவேண்டும். ஏனெனில் 7-ம் ஜடிலன் கி. பி.770-லிருந்தானெனில், அவன் பெயரன் வரகுணமகாராஜன் உத்தேசம் 860 கி. பி. (770+90=860) லிருக்கவேண்டும். ஆதலால் இவனே சங்கபிருதிவிபதி I நிருபதுங்கப்போத்தரையன், ஆதித்தியசோழன் (I) இவர்கள் சமகாலத்தானாகவேண்டும். இவனன்றி இரண்டாம் வரகுண ராஜனை 862-கி. பி. யில் பட்டம் தரித்தவனென்பது பொருந்தவில்லையென்பது நன்குவிளங்கும். சாஸனங்களின் பகுப்புகள் வெளிவராவரையிலும் ஒன்றும் நிர்ணயிக்கமுடியாது. ஆதலால் இவை இப்படி நிற்க, நாம் இச்சாஸனத்திலுள்ள சிற்சில விஷ

(4) செந்தமிழ்த் தொகுதி 4-பக்-335.

யங்களை ஆராய்வோம். இறையனாகப்பொருளின் பாயிரத்தில் கடைச்சங்கத்தைப் பரிபாலித்த அரசர்களிற் கடைசியானவன் கடுங்கோன் என்று கூறியிருக்கிறது. இவ்வரசனே இச்சாஸனத்தில் முதன்முதல் கூறப்பட்டவனென்பது நிச்சயம். இவன்காலம் உத்தேசம் 7-ம் நூற்றாண்டின் முற்பாதியாகும். இவனுக்கு முன்னர்ப் பாண்டிநாடு களப்பிரவம்சத்தரசன் ஒருவனால் கவர்ந்துகொள்ளப் பட்டது. இதனையேதான் திருவிளையாடற்சரித்திரத்தில்,

தன்னு சேனையிற் றுளங்கிய வொருகருநாட
மன்னனன்னநாள் வந்தருட்டென்னனை யோட்டிக்
கன்னிமண்டலங் கொண்டமண்கையர் கைவிழுந்து
முன்னணீடிய வைதிகமுறையையு மொழித்தான்.

என்றும், பெரியபுராணத்தில் மூர்த்திநாயனார் சரித்திரத்தில்,

கானக்கடிசூழ்வடுகக்கருநாடர்காவன்
மானப்படை மன்னன் வலிந்து நிலங்கொள்வானாய்
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்டேர்
சேனைக்கடலுங் கொடுதென்றிசை நோக்கிவந்தான்.

வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பிச்
சந்தப்பொதியிற்றமிழ் நாடுடை மன்னன் வீரம்
சிந்தச் செருவென்று தன்னாணை செலுத்துமாற்றுற்
கந்தப்பொழில் சூழ் மதுராபுரி காவல் கொண்டான்.

என்றும் தெரிவித்துள்ள கன்னடமன்னனே வென்று ஐயரவர்கள் நினைக்கிறார்கள். அதுவே எமக்கும் சரியென்று தோற்றுகிறது. இது நிச்சயமானால் மூர்த்தியாருடைய காலமும் தெளிவாகிறது. களப்பிர ஆக்கிரமத்துக்குமுன்பு பாண்டிநாட்டை யாண்டுவந்தவரசன் பாண்டியாதி ராஜன் பரமேச்வரன் பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதியென்பான். இவன் மதுரைக்காஞ்சியில்,

பல்சாலைமுதுகுடுமியி
னல்வேள்வித்துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட்டுண்ட புகழ்சால் சிறப்பி
னிலந்தரு திருவினெடியோன் போல.

என்னும், உரையில்,

"புகழ்ச்சியமைந்த தலைமையினுடைய பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதி" என்னுங் கூறப்பட்டவனென்பதில் ஐயம்யாது? இவ்வரசன் களப்பிர ஆக்கிரமத்துக்கு முந்தியிருந்தானெனின் இவன் காலம் சற்றேறக்குறைய 6-ம் நூற்றாண்டின் இடைப்பாகமாகும். ஆதலால் இவனைப்பாடிய காரிகிழார், நெட்டிமையார், நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர்களும் இக்காலத்தாராதல் வேண்டும்.

எனவே, பல்யாகசாலை முதுகுடுமிவம்சத்திற் பிறந்தோனாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற (5) பாண்டியன் நெடுஞ்செழியன், முதுகுடுமியினும் பிற்பட்டவனெனவும் வேண்டுமோ? ஆதலால் நெடுஞ்செழியனைப்பாடிய மாங்குடிமருதனாரும், மதுரை

---

(5) மதுரைக் காஞ்சியின் நாயகன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனென்பது எல்லாருக்குந் தெரிந்த விஷயம். இப்பாட்டில் இவன் முன்னோர்களிலொருவன் முதுகுடுமி என்று சொல்லியிருப்பதால் நெடுஞ்செழியனை ௭-ஆம் நூற்றாண்டிலிருந்தவனென்று கொள்ளப்பட்டது. இக்குடுமியின் பெயரானோ புதுக்கோட்டைக்கடுத்த குடுமியான்மலை மிகப்பெயர் பெற்றது? அப்படியன்று. இவ்வரசன் இவ்வூர் மகாதேவி பெயரைப் பெற்றானென்பார்க்குச்சமாதானம் கூறக் காரணம் பலவுள. இவ்வூர்க் கோயிலிற் பழமையானது குடைவரைக் கோயிலே. அக்கோயிலிலமர்ந்துள்ள ஈசுவரனே மூலஸ்தானத்துப் பரமஸ்வாமிகள் என்றழைக்கப்படுகிறார். இப்போது சிகாநாதர் என்று பெயர்படைத்த ஈஸ்வரன் எழுந்தருளியிருக்கும் கோயில் குடைவரைக் கோயிலுக்குப்பிற்பட்டது. இக்குடைவரைக் கோயிலும், திருமெய்யத்துக் கோயிலும் ஒரேகாலத்துண்டானவையென்றும், ஒருவனாலேயே குடைவிக்கப்பட்டதென்றும், அவ்வாறு செய்யப்பட்டது சுமார் கி. பி. 7-வது நூற்றாண்டு எனவும்கொள்ள இடமிருக்கிறது. ஆதலால் இவ்வூர்க் குடுமிநாதஸ்வாமி கோயில் கி. பி. 7க்குப் பின்னுண்டானதாகவேண்டும். அப்போது பல்யாகசாலைமுதுகுடுமி இத்தேவர் பெயரால் பெயர் பெற்றானென்பது இயலாது. ஆதலால் இவ்வூர் மலைக்கு முதன்முதல் குடுமியான் மலையென்று அவ்வரசன் பெயரிருந்திருக்கலாம். இம்மலையின் ஊருக்கே குடுமியான் மலையென்று பெயருண்டாயிருக்கவேண்டும். திருவெள்ளறையிலிருக்கும் ஊர் திருவெள்ளறையென்றானாற்போல, பிறகு குடுமியான் மலையிலிருக்கும் ஈசனுக்கு குடுமியான், சிகாநாதர் என்னும் பெயர்கள் வழங்கத் தலைப்பட்டிருக்கவேண்டுமென்பது திண்ணம்.

க்கணக்காயனர் மகனர் நக்கீரனரும், 7-ம் நூற்றாண்டின் முற்ப குதியைச்சேர்ந்தவர்களல்லரோ? நெடுஞ்செழியன் காலத்தானும், அவனாற்பிணிப்புண்ட யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையும், இவனைப்பாடிய குறுங்கோழியூர்கிழாரும் இக்காலத்தாரே. இவனையேபாடிய குடபுலவியனர், கல்லாடனர், மாங்குடிகிழார் (இவர் மாங்குடிமருதனரேயோ?) இடைக்குன்றூர்கிழார் முதலியவரும் இவர்காலத்தாரே. இவனால் வெல்லப்பட்ட வேள் எவ்வியும், இவனைப்பாடினோராகிய மாங்குடி கிழார், கபிலர், வெள்ளெருக்கிலையார் முதலியோரும் ஒருகாலத்தார்.

யான் முன்னரே இப்பத்திரிகையில் இறையனாரகப்பொருளையும், நக்கீரனாரைப்பற்றியும் எழுதிய (6) விசேஷக்தோடுமேற்கூறியவைபொருந்துகின்றனவேயன்றி ஒருவாற்றானு முரணாதிருத்தலால், தவறென்று சித்தாந்தப்படும் வரை, ஏற்றுக்கொள்ளலாம் என்று தோன்றுகின்றது.

ஆயின் இந்நெடுஞ்செழியன் யாவனே, நிச்சயமாய்த்துணியக் கூடவில்லை. இன்னானென்று திண்ணமாய் அறியக்கூடின் இப்புலவர்கள் காலம் நிச்சயிக்கலாம்.

சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை, தலையாலங்கானத்துச்செருவென்ற நெடுஞ்செழியன் காலத்தானென்று முன்னரே சொன்னோம். இச்சேரன் இராசசூயம் வேட்டபெருநற்கிள்ளியோடு போர்செய்தவன். ஆகவே இக்கிள்ளியும், சேரனைப் பாடிய பொருந்திலிளங்கீரனர், வடவண்ணக்கன் சாத்தனர்; நற்கிள்ளியைப்பாடிய பாண்டரங்கண்ணனர், ஔவையார், உலோச்சனரும் நெடுஞ்செழியனைப்பாடிய கபிலராற் பாடப்பட்ட வேள்பாரியும், விச்சிக்கோ, இருங்கோவேள், செல்வக்கடுங்கோவாழியாதன் அகுதை, மலையமான் திருமுடிக்காரி, வையாவிக்கோப்பெரும்பேகன் கல்லாடனரால் பாடப்பட்ட அம்பர்கிழானருவந்தை, பொறையாற்றுக் கிழான்; மாங்குடி மருதனரால் பாடப்பட்டவாட்டாற்று எழினியாதன்; என்னுமிப்பாவலர்களும் மற்றும்புறநானூற்றில் கூற

(6) செந்தமிழ்த்தொகுதி சு. பக்கம் ௩௫.

ப்பட்டுள்ள புலவர்களுள் பெரும்பாலரும் சமகாலத்தாரென்றும், அவர்களால் பாடப்பட்டோர்கள் ஒன்றிரண்டு தலைமுறையைச்சேர்ந்தவர்களென்றும் தோன்றுகின்றது. மற்றவர்களையும் பற்றி எழுதின் விரியுமென்றஞ்சிவிடுத்தனம். இவைகளை இனிவரும் செந்தமிழ்ப் பகுதிகளொன்றில் எடுத்துக்கொண்டு வியவகரிப்போம்; ஏனெனில் தமிழிலக்கிய சரித்திரத்துக்கு இஃது இன்றியமையாததால் நன்கு ஆராயவேண்டிய விஷயமாகின்றது.

து. அ. கோபிநாதராவ் M. A.,
திருவனந்தபுரம்.

திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

உலகமாகிய தொகுதி இன்னகாலத்துத் தோன்றிற்று இன்னகாலத்து அழிந்ததென்று ஒருவராலுங் காணப்படாது நிற்றலின் அஃது அழிவுபாடுடைய காரியமன்று; நிமித்தமே யெனக்கூறுஞ் சமயக்கணக்கருமுண்மையின் அவர்க்கு இவ்வேது அங்கியதராசித்தமென்னும் ஏதுப்போலியாகுமெனின், அவர் உலகத்தொகுதி காரியமாதலையுணர்ந்தாராகலானும் அவைகாரியமாயின் அவற்றையுறுப்பாகவுடைய உலகும் காரியமாதல் சொல்லாதேயமையுமாகலானும் அக்குற்றமின்று. அங்கியதரன் = இருவரில் ஒருவன். அசித்தம் = உள்ளதென்று கொள்ளப்படாதது. உலகு தானே தோன்றியழியுமியல்பிற்றென்றும் அது நான்கு பூதங்களின் கூட்டமாகலின் அவையே தம்முளொன்றனையொன்று தோற்றி நிறுத்தி யழிக்குமென்றும் அதனாற் பிறிதொருகாரண முடைத்தெனலமையாதென்றுங் கூறுவாரு முண்மையின், அவர் கூறுங் கடாவையாசங்கித்துக் காரணமுடைத்தென்று மேற்கோளை வலியுறுத்தற் பொருட்டு முதற்றேயெனத் தேற்றங்கூறி எழுத்துக்களை யாவருங்காரியப் பொருளென்றே கோடலின் ஆண்டு முதலவென ஏகாரமின்றிக்கூறினர்.

மாறுபட்ட இருதன்மை யொருபொருட்கண் இயல்பினுளவாகாமையானும் நீரிற் சூடுகொண்பின் அதனையியல்பெனக் கொள்ளாது செயற்கையெனவே கோடலானுந் தோற்றமும் அழிவுந் தம்முள் ஒன்றற்கொன்று மாறுபாடுடையவாகலின் அவற்றுளொன்றையியற்கையெனக் கொள்ளினும் மற்றொன்றைச் செயற்கையெனவே கோடல் வேண்டுமாகலானும் செயற்கை காரணமின்றியின்மையானும் உலகு காரணமுடைத்தெனல் பெறப்படுமெனவும் பூதங்கள் தம்முள் ஒன்றற்கொன்று காரணமெனின் அவை நான்குந் தோற்றமும் அழிவு முடையவாகலின் அவ்விருதன்மையுமில்லாத பிறிதொன்றே காரணமாதலமையுமன்றி அவை தாமே யொன்றற்கொன்று காரணமாகாவெனவும் பிறவுங்கூறி மேற்கோளை வலியுறுத்ததற்பொருட்டுத் தேற்றப்பொருளை விரித்துக்கொள்க.

உலகத்தோற்றத்திற்குக் காலமுதலாய பிறகாரணங் கூறுமாறுமுண்மையின் அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சேதனமும் அசேதனமுமாகிய இவ்வுலகிற்கு அசேதனங்காரணமாதலமை யாதென்று மேற்கோளை வலியுறுத்துதற் பொருட்டு, அவன் அவள் அதுவென்று சுட்டுப்படாத கடவுளைப் பகவனென உயர்திணையாற் கூறினர். உலகம் பெரிதாகலின் அதனையாக்கல் ஒருவராலமையாது; பலர்வேண்டு மென்பாருமுண்மையின் அதனையாசங்கித்துக் கடவுட்கு அளவிலாற்றலுண்மையினற் சாலுமென்று மேற்கோளை வலியுறுத்தற் பொருட்டுப் பன்மைகூறுமல் உயர்திணையுள்ளும் ஒருமையாற் கூறினர்.

கடவுள் சேதனமாயினும் மனமுதலாகிய கருவியொடு கூடியே அறியுமென்பாருமுண்மையின் அதனையாசங்கித்து என்பும் நரம்பும் மூளையும் அறிவுமென்பன ஆண்பாற்கூறுந் தோலுந்தசையுமிரத்தமுமென்பன பெண்பாற் கூறுமாகலானும், பிருங்கி முனிவர்க்குப் பெண்பாற் கூறுநீங்கிய வழியும் அறிவு குன்றாமையானும் ஆண்பாற்கூறின்றிப் பெண்மகளறிந்தாளெனல் காட்சியானுங் கருதலானுமேயன்றி யுரையானுமறியப்படாமையானும் பெண்பாற் கூற்றொடு கூடாவழியு மாண்பாலறிதலும் ஆண்பாற்கூற்றொடு கூடினன்றிப் பெண்பாலறியாமையு முணரப்படலிற் கடவுளும் தான் உலகெலா

மாகிய நிலையினும் உலகுடனாகிய நிலையினும் அறிதல்போலவே உலகிற்கு வேறாகிய நிலையினுங் கருவியின்றித் தானேயறிதல் சுதந்திரத் தன்மையா லமையுமென்றுணர்த்தற் பொருட்டும்; கடவுள் விளையாட்டானே உலகத்தைத் தோற்றிக்காத்தழிக்கு மென்பாருமுண்மையின் அதனையாசங்கித்து, விளையாட்டானொரு தொழிலை மேற்கோடல் பெண்மையறிவிற்கியல் பாதலன்றி யாண்மையறிவிற்கியல் பன்மையின் உயிர்களது உள்ளிருணீக்கி யாளுந்தன்மை காரணமாக அத்தொழில்கள் நிகழுமன்றி விளையாட்டானாவனவல்ல வென்றுணர்த்தற்பொருட்டும் உயர்திணையொருமையுள்ளும் பெண்பாலாற் கூறாது ஆண்பாலாற் கூறினார்.

முத்தொழில் விளையாட்டானிகழுமென நூல் கூறலுண்டேயெனின், அஃது கடவுளதாற்றலை நோக்கின் அத்தொழில்கள் அரியவல்ல எளியவேயென்னுங் கருத்தானன்றிப் பயனின்மைக் கருத்தானன்றென்க.

இருடிகளுட் சிலருலகுபடைத்தாரென நூல் கூறலானுங் கடவுளருள்பெற்றாரும் ஆறுகுணம் படைத்தலின் அவரும் பகவனென்னும் பெயர்க்குரிமையெய்தலானும் அவருங்காரணமாதல் செல்லுமாகலின் அதனையாசங்கித்து, அவர் இயற்கையினன்றிக் கடவுளருள் பெற்றே அத்தன்மை யெய்தினமையானும் அவர் தோற்றத்திற்கும் கடவுளே காரணமாகலானும் அவர் காரணமாகார்; அவர்க்கு மாதியாகிய கடவுளே காரணமென மேற்கோளை வலியுறுத்தற் பொருட்டு ஆதி யென்றார்.

உலகிற்குப் பகவன் காரணமென நான்கனுருபாற் கூறிற் பொருளினிது விளங்கவும் அவ்வாறு கூறாது எழுவாயாற் கூறியதென்னையெனின், நான்கனுருபு அதற்குவினையுடைமை முதலாகப் பல் பொருளுடைத்தாய் அவற்றுள் யாதானுமொன்றே யுணர்த்து மியல்பிற்றாகலின் அவ்வுருபு கடிசூத்திரத்திற்குப்பொன்னென்புழிப்போலத் தோற்றத்தைச் செய்யுங் காரணமெனப்பட்டு அதுவாகுகிளவியாகவேனும் கரும்பிற்குவேலியென்புழிப்போலக் காத்தலைச் செய்யுங் காரணமெனப்பட்டு அதற் குபகாரமாகவேனும் பிணிக்கு மருந்தென்புழிப்போல அழித்தலைச் செய்யுங்காரண மெனப்பட்டு

அதற்குப் பிறிதாகவேனும் பொருள் பயக்குமன்றி, ஆக்கல் காத்தல் அழித்தலென முத்தொழிலுஞ் செய்யுங் காரணப்பொருளென உணர்த்தாமையானும் முதற்றென்பது குறிப்புவினைப் பயனிலையாகலின் அதனை விரிப்புழிப் பகவனால் உலகு முத்தொழிற் படுமென்பது பெறப்படலானும் நான்கனுருபாற் கூறாமல் உலகு ஆதிபகவன் முதற்றேயென எழுவாயாற் கூறினர். இங்ஙனம் பக்கமாகிய உலகு எழுவாயாற் கூறப்படவே எழுத்துக்கள் சபக்கமாதலி னவையு மெழுத்தெல்லா மகரமுதலவென எழுவாயாற்கூற லின்றியமையாதாயிற்று.

உலகைப் பகுத்துக்காண்புழி அப்பகுப்பிற்குப் பகவனாகிய காரணத்தொடு காலமுதலாய பிறவுங் காரணமாதல் பெறப்படலின் அக்கால முதலாய பிறவெல்லாம் உலகெனப்படும் பிண்டத்தின் ஏகதேசத்திற்கன்றி முழுமைக்குங் காரணமாகாமையானும் பகுப்பிற்கேயன்றிப் பிண்டத்திற்கும் ஆதிபகவனொருவனே காரணமாகலானும் சேதனமும் அசேதனமுமென இருபாற்றாகிய உலகெனப் பகுப்புத்தோன்றக் கூறிற் பிறகாரணமுங் கூறாமை குன்றக் கூறலாக முடியுமாகலானும் பிண்டத்திற்காவது பகுப்பிற்குமாதல் சொல்லாதே யமையுமாகலானும் உலகெனப் பிண்டமே கூறினர்.

எழுத்துக்களைப் பகுத்துக் காண்புழிப் பல்லு மிதழும் முதலாயவும் பிறவுங் காரணமாதல் பெறப்படலானும் பன் முதலாய பிறவெல்லாம் அப்பகுப்பைத் தொகுத்துக் காண்புழி யதனேகதேசத்திற்கன்றி முழுமைக்குங் காரணமாகாமையானும் உந்தி முதலாமுந்துவளி எழுத்தின்றொகுதிக்கும் பகுதிக்கும் காரணமாயினும் வரிவடிவாகிய எழுத்துக்களின் றொகுதிக்காவது ஏகதேசத்திற்காவது காரணமாகாமையானும் வரிவடிவும் எழுத்தேயாகலானும் ஆதி அகரம் ஒலிவடிவாகிய எழுத்துக்களைத் தனித்தனிக் காண்புழியும் தொகுத்துக்காண்புழியும் காரணமாதல் போலவே அவ்வொலிவடிவைப் புறத்துய்ப்பதாகியவளிக்கும் வரிவடிவிற்கும் காரணமாக நிற்றலானும் ஆசிரியர் தொல்காப்பியனார் தனித்தனிக் காரணங் கூறுங்கருத்தால் "எல்லாவெழுத்துஞ் சொல்லுங்காலைப், பிறப்பினாக்கம் வேறுவேறியல" வென்றாற்போல் ஈண்டும் எல்லாவெழுத்தும் அகரமுதல

வெனக் கூறின் அவை பிண்டமாகாது தனித்தனிப் பகுக்கப்படும் பன்மையாகவே முடிதலிற் பிறகாரணங்களுங் கூறுமை குன்றக் கூறலாக முடியுமாகலானும் எழுத்தெல்லாமெனிற் பிண்டமாகக் கொள்ளப்படுமாகலிற் பிண்டத்திற்காகிய காரணம் பகுப்பிற்கும் சொல்லாதே யமையுமாகலானும் எழுத்தெல்லாமெனப் பிண்டமே கூறினார். எல்லாவெழுத்துமெனிற் பன்மையாதலன்றிப் பிண்டமாகாமையும் எழுத்தெல்லாமென்பது பன்மையாதலொடு பிண்டமாதலும் தொல்காப்பிய முதலான நூல்வழக்கானு முணர்க.

நாதமாகிய ஓசையினின்று விசும்பும் விசும்பினின்று வளியும் உளவாதல் நூற்றுணிபாகலின் உந்திமுதலா முந்துவளிக்கும் ஆதி அகரமாகிய நாதங் காரணமாதல் காண்க.

நாதம் புறத்திசைப்பதன்றி உணர்வுமாத்திரையா னுண்மையானும் வரிவடிவின்கட் புறத்தொலியின்றெனினும் சித்திர முதலாய வெழுத்துப்போல ஒலியுணர்த்தாமையும் நந்துமுதலிரேகைபோலப் பொருளுணர்த்தாமையுமின்றி அவ்வரிவடிவாய எழுத்து ஒலிவடிவாய எழுத்தையும் பொருளையு முணர்த்தலின் அவ்வுணர்வு நாதமின்றியுளதாகாமையானும் நாதத்தா லொலிவடிவும் ஒலிவடிவால் வரி வடிவு முளவாதல் காண்க.

கடவுளது குணங்கள் அளவிலவாயினும் நூல் ஆறுகுணமெனவும் முக்குணமெனவும் எண்குணமெனவும் மொவ்வோராற்றாற் கூறலின் அவற்றுட் பகமென்னு முதனிலையால் அறுகுணமும் உரையுமானத்தா னுண்மை கூறலின், உண்மை யறிவு இன்பம் என்ற முக்குணத்துள் உண்மையும், பகவனென வுயர்திணையாற் கூறலான் அறிவும் இப்பாட்டாற் பெறப்பட்டன. அறுகுணங் கடவுளுக் கியற்கையும் அவனருள் பெற்றார்க்குச் செயற்கையுமாதல் ஆதி யென்றதாற் பெறப்பட்டது. முக்குண முயிர்க்குமுளவாயினுங் கடவுளதுண்மை யாண்டுமொரு தன்மைத்தாதலும் உயிரதுண்மை உடலொடு தோன்றி மறைதலுமென இவ்வேறுபாடும் இன்பமும் அதன் வேறுபாடும் எண் குணமும் வரும்பாட்டுக்களாற் பெறப்படும்.

காணப்பட்ட வுலகத்தாற் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலினெனப் பரிமேலழகருங் கூறினாராகலின் அப்பொ

ருளை யாதானு மோரளவையான் உண்டென வுணர்த்திய பின்னரே அப்பொருட்குக் குணஞ் செயல் முதலாயின கூறல்வேண்டுமன்றி எழுத்துகட்கு அகரம் தலைமையாயினாற்போல உலகத்திற்கு ஆதிபகவன் தலைவனெனல் கூடாது. என்னை? இவ்வுவமையாற் றலைமையென்ப தொன்றுண்டு என்பது பெறப்படுமன்றிக் கடவுளுண்மை பெறப்படாமையானுந் தலைமையுண்மையாற் பொருளுண்மையுஞ் சித்திக்குமெனிற், றேவர் இந்திரனாகிய தலைவனையுடையார் அதுபோலப் பறவைகளெல்லாம் முயற்கோடாகிய தலைமையையுடையவெனக்கூறின் அத்தலைமையால் முயற்கோடும் உண்டெனக் கோடல் வேண்டும். அவ்வாறின்மையானு மென்பது.

இனிப் பரிமேலழகர் வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கியென்றமையான் அவர் புறத்திசைக்கும் அகரவுயிரெழுத்தைக் கருதினாரென்பது துணியப்படும். அங்ஙனமாயிற் காணப்பட்ட வுலகிற்குக் காணப்படாத கடவுளைக் கூறியாங்கு எழுதப்பட்ட எழுத்திற்கு எழுதப்படாத பிறிதொன்று கூறாமை உவமவழுவாக முடிதலானும் எழுத்தெல்லாமெனவே அகரவெழுத்து மடங்கலின் அவற்றுளொன்றாகிய அகரவெழுத்து ஆகாரமுதலிய பிறவெழுத்துக்கேயன்றித் தனக்குந்தானே தலைமையாதல் செல்லாமையானுந் தலைமை பிறவற்றிற்கேயன்றித் தனக்குத்தானே யாதலின்மையானும் எழுத்தெல்லாமெனினும் அகரமொழிந்த எழுத்தெல்லாம் அகரமாகிய முதலையுடையன வென்பதே கருத்தெனின் ஆசிரியர் எழுத்தெல்லாவற்றுள்ளும் அகரந்தலைமையென ஏழனுருபாற் கூறல்வேண்டும். அன்றேனுந் தேவர்க்கு இந்திரன் தலைவனென்றாங்கு எழுத்தெல்லாவற்றுக்கும் அகரந்தலைமையென வேற்றுமைமயங்கலு மிலக்கணமாதலின் நான்கனுருபாற் கூறல்வேண்டும். அங்ஙனம் கூறாமையானும் அஃதுரையன்மை யறிக.

இனி முதலெனற்குக் காரணமெனப் பொருளுரையாது தலைமையெனக் கொள்ளலும் பொருந்தாது. என்னை? ஆதியெனினும் முதலெனினும் தலைமையெனினு மொக்குமாகலின் பகவனாகிய முதலெனல் கூடுமன்றி ஆதிபகவனாகிய முதலென்பது கூடாமையானும் பகவன் என்பது பலபொருள் உணர்த்தலின் அப்பொருள் ஆதி

யென்பதால் அமையுமெனிற் பகவனென்னும் பெயர்ப்பொருள்களுக்குப் பகவன் ஆதியெனவே அவன் ஏனைப்பொருள்களுக்கும் ஆதியெனல் சொல்லாதே யமைதலானுமென்பது. ஆதியே காரணமாதலொரு தலையின்மையின் ஆதிபகவனாகிய காரணமென லமையுமென்க.

இனி உலகென்றது எண்டுயிர்கண் மேனின்றதென்றார். அதுவும் பொருந்தாது. என்னை; முதற்றேயுயிரெனினுந் தனிநிலையாமையானும் உயிர்கட்குப் பகவன் முதலெனவே உயிரில் பொருளுக்குப் பகவன் முதலாகான், பிறிதொன்று முதலாதல் வேண்டுமெனவும் பொருள் பயத்தலானும் ஆசிரியர்க்கிது கருத்தாயின் எழுத்தெல்லா மென்றாற்போல உயிரெல்லாமென விதந்து கூறுவராகலானுமென்பது.

இங்ஙனம்,

அ. சண்முகப்பிள்ளை.

நல்லொழுக்கம்.

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்ச்சி.)

இப்பொழுதுள்ள பயத்தில் மிகுந்த பாகமானது மனோராஜ்யத்தால் உண்டாகியதேயாம். மனசானது, சம்பவிக்கக் கூடியதாயும் ஆனாற் சம்பவிப்பது அருமையாயுமுள்ள தீமைகளின் சுவரூபங்களைக் கற்பித்துக்கொள்கின்றது. இவ்வாறு உண்மையான அபாயங்களுடன் மற்போர்செய்து வெல்லக்கூடிய தைரியத்தைக் கூட்டிக்கொள்ளத் தகுதியுடையவர் அனேகர், மனோசம்பவமான அபாயங்களாற் பயத்தில் வீழ்த்தப்படுகின்றனர். மனோதத்வமானது கண்டிப்பான நிலைக்குள் கட்டுப்பட்டாலொழியத்தீங்குகளுக்கு முன்னமே இடங்கொடுத்து, நாமே உண்டாக்கிக்கொள்ளும் பாரத்தைச் சுமந்து, பாதிவழியில் அவைவரு முன்னரே சென்று அவைகளை எதிர்கொள்ள உட்புகுகின்றோம்.

தைரியத்தைக் கற்பித்தலானது பெண்களுக்குக் கற்பிக்க வேண்டிய பாகத்திற் சேர்க்கப்படுவது வழக்கமின்று. ஆகிலும், கானம், பிரான்சு பாஷை அல்லது உருண்டை போடுதல் ஆகிய இவற்றினும் அது உள்ளபடியே அதிக முக்யமானதாக விருக்கின்றது. ஸ்திரீகளுக்கு மெதுவான பயமும் அவளைப்பிரியப்படுத்தக்கூடிய கீழ்ப்படிவும் இலட்சணங்களாயிருக்க வேண்டுமென்று,ஸர் ரிச்சார்ட் ஸ்டீல் (Sir Richard Steel) என்பவர் கொண்ட கொள்கைக்கு மாறாக, அவர்களை அதிக உதவியுள்ளவர்களாயும், அதிகமாய்த் தற்சார்புள்ளவர்களாயும், மிக அதிகமாய் உபயோகமும் இன்பமுமுள்ளவர்களாயும் செய்துகொள்வதற்குச் சாதனமாகத் தீர்மான புத்தியிலும், தைரியத்திலும், பழக்கு வித்தல் வேண்டும்.

உள்ளபடியே பயமுள்ள பொருளினின்றும், மனோரம்மியமாவதும் சினேகிக்கத்தக்கதாவதும் ஒன்றும் கிடையாது. மனோ சம்பந்தமாக வேனும், தேக சம்பந்தமாக வேனும், உண்டாகிய சகல பலஹீனமும், அங்கஹீனத்திற்குச் சமானமாகவும் இனிமைக்கு மாறாகவும் இருக்கின்றது. தைரியமானது காருண்யம் பொருந்தியதாயும், மேம்பட்டதாயும், இருக்கின்றது. பயமானது, எந்த ரூபத்திலானாலும், இழிவும் வெறுப்புமுள்ளதாயிருக்கின்றது. ஆகிலும் தைரிய முள்ளவர்களிடத்தில் மிகுந்த உருக்கமும் சாந்தமும் இடையறு திருக்கின்றன. சிற்பனாகிய, ஆரிச்செப்பர் (Ary Scheffer) ஆனவன் தன் குமாரத்திக்கு எழுதியது வருமாறு, 'அன்புள்ள குமாரத்தியே, நல்ல தைரியமும், சாந்தமுமான இருதயமுடையவளாயிருக்க முயற்சி செய். இவைகள் தாம் ஸ்திரீகளுக்குரிய உண்மையான குணங்கள். துன்பங்களை ஒவ்வொருவரும் எதிர்பார்த்தல் வேண்டும். நல்லதிர்ஷ்டம் துரதிர்ஷ்டமான காலத்திற் கவனிக்கவேண்டிய ஒரே மார்க்கமாவது என்னெனின், இரண்டிலும் கௌரவமாய் நடப்பதேயாம். நாம் தைரியத்தை இழக்கப்படாது, அல்லது நமக்கும் நாம் நேசிக்கிறவர்களுக்கும் கேட்டையுண்டாக்கும். போராடுவதும்; திரும்பத் திரும்பப் போரைத் தொடுப்பதுமாகிய இதுதான் இந்த ஜன்மத்திற்குப் பரம்பரைப் பாத்தியமாயிருக்கிறது.”

வியாதியிலும் துக்கத்திலும் ஸ்திரீகளைவிட அதிக தைரிய முள்ளவர்களும், கஷ்டத்தைப்பற்றிச் சிறிது முறையிடுபவர்களும் வேறொருவரும் இல்லை. அவர்களுடைய மனசு சம்பந்தப்பட்ட அளவில் அவர்கள் தைரியத்தைக் குறித்து உள்ளபடி பழமொழியே உண்டாயிருக்கிறது.

மிகவும் பலத்த கஷ்டங்களும் சங்கடங்களும் உண்டான காலத்தில் புருஷர்களைப்போலவே ஸ்திரீகளும் சகிக்கும் தன்மையுடையவர் என்று அனுபவத்தால் வெளியாகின்றது. ஆனால் பொறுமையுடன் அற்பமான பயங்கரங்களையும், அற்பமான எரிச்சல்களையும், சகிக்கும்படி அவர்களுக்குக்கற்பிக்கிற விஷயத்தில் நாம் சிரமம் எடுக்கிறதில்லை. அத்தகைய துன்பங்களுக்கு இடங்கொடுத்துக் கொஞ்சி விளையாடும்படி விட்டால், அவை நோய் கொண்ட உணர்ச்சியாக மாறித் தங்களையும் தங்களைச் சூழ்ந்தவர்களையும் நீடித்த அசௌக்கியமான ஸ்திதியில்வைத்து அவர்களுடைய உயிருக்கு விஷமாகின்றன.

மனசின் இந்த நிலைமையைச் சீர்ப்படுத்துவதற்கான சிறந்த வழியானது சன்மார்க்கத்தையும், மனசையும், சுகமாய் அப்பியாசப்படுத்துவதேயாம். ஸ்திரீகளுடைய ஒழுக்கத்தை விருத்தி செய்வதற்குப் புருஷருக்குப்போலவே மனோதிடம் அவசியமாகின்றது. அஃது அவர்களுடைய காரியங்களை நடத்துவதற்கு அவளுக்குத் தகுதியையும், மன அமைதியையும் கொடுத்து, அவசர காலங்களில் ஊக்கத்துடனும் பயனுடனும் நடக்கத் திறமையுண்டாக்குகின்றது. ஒழுக்கமானது ஓர் புருஷனிடம் போலவே, ஸ்திரீயிடத்திலும், கற்பினுக்குச் சிறந்த காவலாகவும், மதத்தினுக்குச் செவிலியாகவும், நோத்தைச் சீர்ப்படுத்தும் உயர்ந்த கருவியாகவும் இருக்கக் காண்போம். சரீரத்தின் அழகானது விரைவில் அழிந்து விடுகின்றது. ஆனால் மன அழகும், ஒழுக்க அழகும் வளர வளர விசேஷக்கவர்ச்சியைத் தருகின்றது.

ஸ்திரீகளின் தைரியமானது, மிகவும் உண்மையானது. ஏனென்றால் பெரும்பாலும் அது பொறுமைத் தன்மை யுடையது, அது உலகத்தார் உற்சாகப் படுத்துவதால் பல மடைகிறதில்லை.

ஏனென்றால், அது பெரும்பாலும் சொந்தக்குடும்ப சம்பந்தமான அமர்ந்த இடங்களிற் காட்டப்படுகிறது. ஆகிலும் ஸ்திரீகள் வீரத் தன்மையான பொறுமையும் சாந்தமும் உடையராயிருந்ததற்கு திருஷ்டாந்தங்கள் உண்டு. அவைகள் சில சமயங்களில் பிரகாசத் திற்கு வருகின்றன. ஜெர்ட்டிரூட்-வன்-டெர்-வர்ட், (Gertrude-Von-Der-Wart) ஐப்பற்றிய சரித்திரத்தில் மிகவும் கீர்த்திபெற்ற திருஷ்டாந்தம் இருக்கின்றது. அவளுடைய கணவன் ஆல்பர்ட் (Albert) சக்கிரவர்த்தியைக் கொன்றவர்களில் ஒருவனாகப் பொய்யாய்க்குற்றஞ்சாட்டப்பட்டு, உயிருடன் சக்கரத்தில் வைத்து அவன் சரீரத்தைப் பின்னப்படுத்தும்படி எல்லாவற்றிலும் மிகவும் பயங்கரமான தண்டனை விதிக்கப் பெற்றான். தன் கணவன் பேரிற் குற்றமில்லையென்று மிகவும் தீர்மானமாய் உணர்ந்திருந்ததால், அந்த விசுவாசமுள்ள ஸ்திரீயானவள், அவனுடைய மரணவேதனையைத் தணிப்பது கருதி, சக்கிரவர்த்தியின் கோபத்தையும் அக் காலத்தின் குளிர்ச்சியையும் தாங்கிக் கொண்டு, இரண்டு பகலும் இரவும் அவனிடத்திற் காத்துக்கொண்டு, இறுதி வரை அவன் பக்கத்தில் நின்றாள்.

ஆனால் ஸ்திரீகள் சகிக்கும் தைரியத்திற்கு மட்டும் பேர் போனவர்களல்லர். அன்பால் அல்லது கடமையின் உணர்ச்சியால் தூண்டப்பட்டுச் சில வேளைகளிற் சுத்த வீரர்களாகவும் விளங்கியிருக்கின்றனர். ஸ்காத்லாந்து (Scotland) இன் இரண்டாவது ஜேம்ஸ் (James II) இன் உயிரைநாடித்துராலோசனைக் கூட்டத்தார் பெர்த்(Perth)இலுள்ள அவனுடைய இருப்பிடத்தில் நுழைந்தபொழுது, அவ்வரசன் தன்னுடைய அறைக்கு வெளி அறையில் இருந்த ஸ்திரீகளைத் தான்தப்பித்துக்கொள்ளச் சாவகாசம் கிடைக்கும்படி தங்களால் ஒல்லுமாறு கதவுகளைக் காத்துக் கொள்ளச் சொன்னான். திறவு கருவிகளைத் திருப்பக் கூடாதபடி கதவுகளின் பூட்டுகளை முன்னமே, அச்சதியோசனைக் காரர் நாசப்படுத்தி யிருந்தனர். அவர்கள் ஸ்திரீகளின் அறையை அணுகிய பொழுது, அந்தத் தாழ்ப்பாளும் எடுபட்டிருந்ததாகத் தெரியவந்தது. ஆனால் அவர்கள் நெருங்கி விட்டார்களென்பதைக் கேள்வியுற்றதின் பேரில் தைரியமுள்ள, காதரின் டோக்கிளாஸ்

(Catherin Douglas) என்பவள், தன் வம்சத்திற்குரிய பரம்பரை தைரியத்துடன் அந்தத் தாழுக்குப் பிரதியாகத் தன்கையைக்கதவின் குறுக்கே தைரியமாய்ப் புகுத்திக் கொண்டனள். அவள் கையை முறித்து அந்த ஸ்திரீகளைத்தள்ளி உருவிய கத்தியுடனும் ஈட்டியுடனும், அந்தச் சதியோசனையாளர் அவ்வறைக்குட் புகும் வரை, அந்த ஸ்திரீகள் ஆயுதம் பூணுமலிருந்தும், அவர்களை எதிர்ப்பதற்கு முயன்றனர்.

நாசௌ (Nassow) வின் உவில்லியம் (William) என்பவருக்கும் அட்மிரல் காலிக்னி (Admiral Coligney) என்பவருக்கும் யோக்கியமான சந்ததியாகிய சார்லோத்-டி-லா வால்லேதம் (Latham) வீட்டின் பாது காப்பானது ஒரு கௌரவமான ஸ்திரீயின் சுத்தவீரம் பொருந்திய பராக்கிரமத்திற்கு விசேஷ திருஷ்டாந்தமாக இருந்தது. பார்லிமென்றின் சேனைகள் வீட்டை ஒப்புவிக்கும்படி அவளைக்கேட்டதில் அந்த வீட்டைக் காத்துக்கொள்ளும்படி தன் கணவன் தன்வசம் ஒப்புவித்ததாகவும், தன்னுடைய பிரியமான கணவனுடைய ஆஞ்ஞையின்றி ஒப்புவிக்க முடியாதென்றும் ஆனால் தன்னைக் காத்து விடுவிப்பதற்குக் கடவுளை விசுவசிப்பதாகவும் அவள் பஹிரங்கமாகச்சொன்னாள். தற்காத்துக் கொள்வதற்கு அவள் செய்த ஏற்பாடுகளில் அதிர்ஷ்டமாவது அல்லது அஜாக்கிரதையாவது, பிற்காலத்தில் உதவிசெய்ததெனும்படி தன் கண்ணுற் பார்த்து விட்டதொன்றுமில்லை யென்றும், அவளிடத்தில் முன்னிருந்த பொறுமையுடன் மிகவும் தீர்மானமான வைராக்கியசித்தமும் சேர்ந்ததென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அந்தப் பராக்கிரமுமுள்ள ஸ்திரீயானவள் அந்தச்சத்துருக்களை யெதிர்த்துத், தன் வீட்டையும் வீட்டிற் குரியதையும், ஒருவருஷமுழுதும், காத்தாள். அதில் மூன்றுமாசம் அது நெருக்கமாய் முற்றுகை போட்டுக் குண்டுபோடப்பெற்றது. கடைசியில் மிகவும் வீரமானதற்காப்புக்குப்பின்னர் ராயலிஸ்டு சேனை (Royalist Army) வந்து முற்றுகை நீக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

சிவமயம்.

பெரிய புராண முதற் செய்யுளுரை.

—:o:—

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவ
னிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

இதன் பொருள். உலகிலுள்ளார் யாவரானும் உணர்ந்து சொல்லுதற்கரியவனும் திங்கள் விளங்கிய கங்கை பொலிந்த சடையையுடையவனும் அளவிடப்படாத சோதிவடிவானவனுமாகிய நடேசபிரானது திருவடியை வாழ்த்தி வணங்குவாம். எ - று.

அம்பலத்தாடுவான் என்பது நடேசன் என்னும்பொருட்டு விசேடியமாய் நிற்ப, 'அரியவன்', 'வேணியன்', 'சோதியன்' என்பன அதன் விசேடணமாய் நின்றன. உலகெலாம் என்பது ஈண்டு உணர்ந்தோதற் குரிய வுயிர்கண்மேனின்றது. உணர்ந்தோதற்கரியவன் என்பது வாக்குமனாதீதப் பொருளாயுள்ள சிவத்தை உணர்த்தி நின்றது. உலாவியவேணி, மலிவேணி, எனத்தனித்தனி கூட்டி முடிக்க. சோதியன் குறிப்பு வினையாலணையும் பெயர். பிரம விஷ்ணுக்களாலளவிடப்படாத சோதியன் என்க. மலரடி, மலர் போலும் அடி. சிலம்பு அடை. மலரடி வினைத்தொகையுமாம். சிந்தித்தலை, உபலக்கணத்தாற் கொள்க.

'அரியவன்' என்பது அருவத்திருமேனியையும், 'வேணியன்' என்பது உருவத்திருமேனியையும், 'சோதியன்' என்பது அருவுருவத்திருமேனியையும் குறித்து நின்றது. 'அரியவன்' என்றது அருவுருவமும், உருவமும் போலுணர்ந்து சொல்லுதற்குப் புலப்படாதவன் என்றபடி. இதனை,

இல்லா முலைப்பாலுங் கண்ணீருங் மேந்திழைபா
னல்லா யுளவாமா னீர்கிழல்போ—லில்லா

வருவாகி நின்றானை யாரறிவார் தானே
யுருவாகித் தோன்றானே லூற்று.

என்பதிலருப்போற் கொள்க. இனி, இது வாக்குமனாதீதகோசரமாய் நின்ற அப்பொருளை உணர்த்தி நின்றதுமாம். இப்பொருட்கிசைய அம்பலத்தாடுவான் என்பதை, "சிவன்" என்பது போற் பெயர் மாத்திரையாகக் கொள்க. அம்பலத்தாடுவானே இம்மூன்று வடிவையுமுடையரென்பது கருத்து. இவ்வாறன்றி இச்செய்யுளைக் கொண்டுகூட்டிப் பொருள்கூறல் பொருந்தாது. விரிப்பிற்பெருகும்.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

கோபமும் அதனாலாகிய தீமைகளும்.

பிறர் நம்மிலும் மிக்கவராயிருப்பினும் நமக்குச் சமானமானவராயிருப்பினும் நம்மிலும் குறைந்தவராயிருப்பினும் ஒரு காரியத்தைச்செய்தவிடத்து அது நம்முடைய மனதுக்கு ஒவ்வாவிட்டாலும் நமக்குத் தீங்கை விளைத்தாலும் அவர்களை அந்தக் காரியத்துக்காகத் தண்டிக்க நம்மைத்தூண்டும் துர்க்குணமே கோபம் என்று சொல்லப்படும். இந்தக் குணம் எப்படிப்பட்ட சத்புருஷனுக்கும் ஒருகாலத்தில் உண்டாகும் என்று மனோதத்துவ லட்சண சாஸ்திரிகள் கூறுகிறார்கள். சகல உணர்ச்சிக்கும் மூலாதாரஸ்தானமாகிய மூளையினின்றும் பற்பல நரம்புகள் தேகமுழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்நரம்புகள், ஆன்மநிலையாகிய மூளைக்கு உணர்ச்சி உண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகளென்றும், மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகளென்றும் இருவகையாயுள்ளன. ஒருவன் நம்மைத் திடீரென்று தோளிற் குத்தினானென வைத்துக்கொள்வோம். நம்மை அந்தப்படி குத்தினவனை மறுபடியும் நாம் அதேமாதிரி குத்தவேண்டியதென்று நாம் எண்ணங் கொள்ளுவதற்கு முன்னமே, அவனைக்குத்தவோ வேறே எதற்கோ வெகு சீக்கிரத்தில் நம்

முடைய கை எழுகின்றது. இதற்குக் காரணம் யாது? அவன் நம்மைக்குத்திய வுடனே அதிசீக்கிரத்தில் அவ்விஷயத்தை ஆன்ம நிலையாகிய மூளைக்குச் சில நரம்புகள் தெரிவிக்கின்றன. அங்கு நிகழும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் வேறே சிலநரம்புகள் அத்யற்புதமான வேகத்துடன் இயங்கி நம்முடைய கரத்தைத் தூக்குகின்றன. ஸ்மரணை தப்பித் தூங்கிக்கொண்டிருக்கும் ஒருவனுடைய கரத்தை நாம் கிள்ளினால் அவன் தன்னுடைய கரத்தை உடனே மடக்கிக்கொள்ளவேண்டுமென்கிற எண்ணங்கொள்ளாதிருந்தும் அவனுடைய கரம் உள்ளுக்கு வாங்கிக்கொள்வதையாகிலும், முன்னிருந்த நிலையிலிருந்து வேறே நிலைக்குத் திரும்புவதையாகிலும் நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம்; உணர்ச்சி யுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகள், மூளையினிடத்துண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகள் என்னும் இருவகை நரம்புகளின் அதிவேகமான இயக்கமே மேலெடுத்துக் காட்டப்பட்டதற்குக் காரணம். ‖ ஒருவன் தன் மொழிகளினாலாவது செய்கைகளினாலாவது நமக்கு அருவருப்பான உணர்ச்சியை உண்டாக்குங்காலத்து உடனே அவனைத் திட்டவாகிலும் அடிக்கவாகிலும் வேறேயாதொரு தீங்கைச் செய்யவாகிலும் எழுகின்ற மனநிலைக்குத்தான் கோபமென்று பெயர். மேற்கண்ட இருவகையான நரம்புகளின் இயக்கமே அதற்குக் காரணம். ஒவ்வொருவனுக்கும் அவ்விருவகையான நரம்புகளும் அமைந்திருக்கிறபடியினால் ஒவ்வொருவனுக்கும் கோபமென்பது இயல்பில் உதிக்கத்தக்கதோர் குணமாயிருக்கிறது. இவ்விருவகையான நரம்புகளும் தாழ்ந்த ஜீவராசிகளுக்கும் அமைந்திருக்கிறபடியால் அவற்றிற்கும் கோபம் என்னுங் குணம் இயற்கையாயிருக்கிறது. இக்குணத்தை முழுதும் போக்குவது சாத்தியமல்லாத காரியமாயிருக்கினும் ஒவ்வொருவனும் அதைத் தன்னுடைய புத்தியினால் அடக்குதல் கூடும். அந்தப்படி அடக்காது விடுவோமாயின் பெருத்த தீமைகள் நமக்கும் ஏனையோர்க்கும் எப்போதும் உண்டாய்க்கொண்டேவரும். நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பல காரியங்களைச் செய்துகொண்டு வருகையில் அபிப்பிராய பேதத்தினால் நம் மனதுக்கு அவை ஒவ்வாவிடத்து நம்மிடத்தில் கோபம் பிறந்துகொ

ண்டேயிருக்கும். அதைக் கூடுமானவரையில் அடக்க முயலவேண்டியது நம்முடைய கடமை. ஆறுவது (முழுவதும் அற்றுப்போவது) சினம் என்றுகூறாமல், ஆறுவது (தணியத்தக்கது) சினம் என்று ஔவையார் கூறிய அருமையை யோசித்துப் பார்க்கையில், மனிதனுடைய மனோதத்துவ லட்சணத்துக்குச் சினம் இயற்கையான குணமென்பதையும், அதை அறவே போக்குவது எப்படிப்பட்டவனுக்கும் அசாத்தியமென்பதையும், அதை ஒவ்வொருவனும் தன்னுடைய மனோதிடத்தைக்கொண்டு தணிக்கவேண்டியதென்பதையும் அறிவிக்கவே அம்மாது சிரோமணி அங்ஙனம் கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. ஒரு பெரியவர் ஓர் ஊரில் யார் என்ன சொன்னபோதிலும் கோபிக்கிறதேயில்லையென்று விருது கூறிக்கொண்டிருந்தார். அதைக் கேள்வியுற்ற ஓர் ஆசியக்காரன் அவரிடத்திற் சென்று,"சுவாமீ! தங்களுக்கு எப்போதும் கோபம் வருகிறதே யில்லையா?" என்றான். அவர் அவனைநோக்கி அதி சாந்தமாய் அப்பா! எப்போதும் வருகிறதேயில்லை யென்றார். மறுபடியும் அவன் அப்படியே கேட்டான். அவர் அதற்கும் அதேமாதிரியாக விடை பகர்ந்தார். மீண்டும் மீண்டும் முப்பது நாற்பதுதரம் அவன் அதே கேள்வியைத் திருப்பித் திருப்பி மூச்சுவிடாமல் கேட்டுக்கொண்டேயிருந்தான். அப்போது அப்பெரியவர் சீ! சீ! நீ முட்டாளாயிருக்கின்றாய், எத்தனை தடவை உனக்கு நான் உத்தரம் சொல்லுகிறது? போ, என்று முகங்கடுத்துக் கூறினார். இதைக்கண்ட மாத்திரத்தில் அவன் சுவாமீ! இதோ தங்களுக்கு இப்போது கோபம் பிறந்ததே. எப்போதும் கோபிப்பதில்லையென்னும் பிரதாபம் வெட்ட வெளிச் சமாயிற்றே என்று பரிகாசம் செய்துகொண்டே போய்விட்டான். ஆகையால் எப்படிப்பட்டவனிடத்தும் ஒரு காலத்தில் கோபம் தன்னையறியாமலே உதிக்கும். காமக்குரோதாதிகளை அறவேவிட்டொழிந்த துறவிகளுக்கும் சினம் ஒவ்வொருகாலத்திலுண்டாதலியற்கை; ஆனால் அவர்களுடைய கோபம் பிறருக்கு நன்மையையே விளைக்குமென்றும், ஆதலால் அதை மறக்கருணையென்றும் சாஸ்திரம் கூறுகிறது.

கோபம் பெரும்பாலும் மனோதிடமற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடி உண்டாகும். பாலியர்களுக்கும் வயோதிகர்களுக்

கும் அடிக்கடி சொற்ப விஷயங்கள் காரணமாகவும் கோபம் உண்டாகின்றதை யோசிக்கையில், கோபத்தை அடக்குவதற்கு மனோதிடமும் தேகதிடமும் அத்தியாவசியகமென்று தெரியவருகிறது. கோபம் உண்டாகும்போது மாத்திரம் அதைச்சற்றே அடக்கிவிட்டால் அதன் வேகத்துவம் வெகுலேசாய்க் குன்றும். ஒருவரைக் கோபிக்க மனமெழும்போது நெடுங்கணக்கை ஒரு விசை மூகபாடமாகச் சொல்லிவிட்டுப் பிறகு கோபித்துக்கொள் என்று ஒரு சாஸ்திரியார் கூறுகிறார். அதை ஒருதரம் சொல்லி முடிப்பதற்குள்ளாகக் கோபம் தணிந்தேபோய்விடுமென்பது அனுபவபிரசித்தம்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ"

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தா னகுடனுங் கோலமாற்றினன்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே"

என்று கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக்குறித்து மூதறிஞர் பலவாறாகக் கூறியுள்ளார். உலக சரித்திரமும் அதற்குச்சாட்சி பகரத் தக்கதாயிருக்கிறது.

ஒருவன் நமக்கு யாதொரு தீங்கான காரியத்தைச் செய்கையில் அவனை அதற்காகத் தண்டிக்கவேண்டுமென்கிற எண்ணங்கொண்டன்றோ நாம் அவனைக் கோபிக்கின்றோம்? நாம் அந்தச் சமயத்தில் கோபியாது பொறுமையுடன் சும்மா இருந்து விடுவோமாயின் நமது பொறையுடைமையே அவன் மனச்சான்றுடையவனாயிருந்தால் அவனது மனதை யறுக்கும்; இது மனோதத்துவ லட்சணம். அந்த சமயத்தில் நாம் கோபித்துக்கொண்டு அவனுக்குப் பிரதிபலனாக யாதொரு தீங்கைச் செய்வோமானால் அப்போது எவ்வளவு நமக்கு மனச் சந்துஷ்டி உண்டாகுமோ அதைவிட ஆயிரமடங்கதிகமாய்ப் பொறையுடைமையாற் பெருமகிழ்வு பின்புண்டாகும். இக்கருத்தை யமைத்தே,

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத்தாந்தந்
தகுதியான் வென்றுவிடல்" என்றும்,

"ஒறுத்தார்க்கொருநாளையின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும்புகழ்" என்றும்,

தெய்வப்புலவர் தமது தமிழ் மறையில் கூறியுள்ளார். அன்றியும் மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு துர்க்குணமும் பிறர்க்கும் தனக்கும் தீமையைத் தரத்தக்கனவாயிருக்கின்றன. அவற்றுள் சில தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவாகவும் மற்றும் சில பிறர்க்கே பெருத்த ஹானியைத்தரத்தக்கனவாகவும் இருக்கின்றன. இவ்விரு வகைக் குணங்களுள் தனக்கே பெருத்த ஹானியைத் தரத்தக்கனவற்றிலெல்லாம் கோபம் நடுநாயகம். ஆகையினாற்றான்,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்"

என்று நாயனார் தமது உத்தரவேதத்திற் கட்டளை யிட்டிருக்கின்றனர். தன்னிலும் மிக்காரிடத்தில் ஒருவன் கோபங்கொள்ளக் கூடாதென்று நாம் வற்புறுத்திக்கூற வேண்டுவதில்லை; ஏனெனில், அதனால் விளையும் பலப்பிராப்தியே அவனுக்கு வெகு சீக்கிரத்தில் புத்தி கூறத்தக்கது. ஒருவன் தன்னிலும் கல்வி, செல்வம், பலம் முதலியவற்றிற் குறைந்தவனிடத்துச் சினங்கொள்ளாதிருத்தலே பெருமையாகும். அதுதான் பொறையுடைமைக்கு அழகு. "எல்லா-மொறுக்கு மதுகை யுரனுடை யாளன்-பொறுக்கும் பொறையே பொறை" என்று மேலோர் கூறியிருக்கின்றார்கள்.

இவ்வளவு தீயதான ஓர்குணத்தை ஜகதீசன் மனிதனிடத்துஏன் அமைத்துவைக்கவேண்டும்? என்னும் வினா நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோர்காலத்தில் நிகழக்கூடும் அல்லவா? லௌகிகதருமத்தை நடத்திக்கொண்டுவரும் ஒருவனிடத்தில் கோபம் முற்றுமே இல்லையென்று வைத்துக்கொள்வோம். அவன் கூட்டுறவுகொள்ளும் ஏனையோரிடத்துப் பொய் களவு கொலை முதலிய தீக்குணங்களிருக்கிறபடியினால் அவற்றினின்றும் அவன் தப்பிப் பிழைப்பதற்காவது அவற்றை அவர்களிடத்தி லிராமல் ஓட்டுவதற்காவது அவ

னிடத்தில் சிறிது சினமிருத்தல் அத்தியாவசியம். ஒருவன் தன்னுடைய அருமைப்புதல்வன் தீயகாரியங்களைச் செய்யக்கண்டகாலத்து உடனே அவனைத் தண்டிக்கவேண்டியது தந்தையாகிய தன்னுடைய பெருங் கடமையல்லவா? அவனை அந்தப்படி தண்டிப்பதற்குச் சினம் சிறிது வேண்டியதல்லவா? அவனிடத்தில் சினம் முற்றுமே யில்லையானால் அப்புதல்வனைத் தண்டிக்க அவனுக்கு மனம் எழுதல் அரிது. இவ்விதமான சினத்தைத்தான் பெரியோர் மறக்கருணை என்பர். ஆகவே நடுவுநிலைமையுடனிருந்து இந்த விஷயத்தை யோசித்துப் பார்க்குமிடத்து, சினம் வரம்புகடந்து சென்றால் ஜனசமூக வாழ்க்கைக்கும் சினங் கொள்வோனுக்கும் பெருங்கேட்டைத் தருமென்றும், ஏனைய தீக்குணங்களிருக்கிறபடியினால் அவற்றை அளவுகடக்க வொட்டாமைக்குச் சினம் சிறிதிருத்தல் ஜனசமூக வாழ்க்கைக்குக் கேடல்லவென்றும், எப்படிப்பட்ட சாதுவினிடத்திலும் சினம் முற்றுமே யில்லாமற் போகாதென்றும், அதைக் கூடியவரையில் தணித்துக்கொண்டே வருவதுதான் உத்தம புருஷனுடைய குணமென்றும் தெரியவருகிறது.

"ஜனவிநோதினி"

உ

திருச்சிற்றம்பலம்.

பெரிய புராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

திருக்குறிப்புத் தொண்டநாயனார் புராணம்.

(க) நல்லதொண்டை நாடு, இயையும்படி பலவகைப்பட்ட ஆன்மாக்களுக்கு அளவற்ற கிருபையையுடைய மாதாவைப்போன்ற உமாதேவியார் ஏகராகிய சிவனைத்தழுவ, ஆராய்கின்ற நான்குவேதங்களும் ஸ்தோத்திரஞ்செய்ய, நின்று அரிய தவத்தைச்செய்யத் தான் சுத்தமாகிய மகத்துவம் பொருந்திய தவத்தைச்செய்தது.

(உ) வழியின்பழைய மேன்மையில் நிகழ்கின்ற பெரிய நல்ல தொண்டைநாடு, நன்மைமிக்க நடுவுநிலையான ஒழுக்கத்தினாலே நயந்த தன்மையைப் பொருந்திய முதன்மை மிக்க பெருங்குடிகள் தழைக்க வலிமைபொருந்திய உயர்ந்த மதிலையுடைய வளஞ்செறிந்த பதிகளைப் பொருந்தியது. தழைப்ப, ஓங்கு எனமுடிக்க.

(ங) பெரிய தொண்டைநாடு, நல்லதன்மைகளைச்செய்கின்ற பழையனூரிலுள்ள வேளாளர்கள் குற்றம்வந்து பொருந்தியபொழுது தங்களுடைய ஆன்மாவையும், வணிகனுக்கு ஒருதரங்கூறிய சத்தியத்தையுஞ் சீர்தூக்கி அச்சத்தியத்தையே உயிரைவிட்டுங் காக்கப்பெற்ற மேன்மையினால் விளங்கியது. சிறுத்தொண்டர் என்றது வேளாளரை. வணிகமகனுக்குச் சொல்லிய வார்த்தையின்பொருட்டு உயிரைக் கொடுத்ததாவது:—ஒருவன் நாடோறும் பிறமங்கையரிடஞ் சென்று நண்புற்றிருப்பதை அவன்மனைவி அறிந்து தடுத்துத்தன் வசமாகும்படி வேண்டியஉபாயங்கள் சொல்லியுங் கேளாதிருந்ததுமன்றித்தன் எண்ணத்திற்கு இவள் ஓரிடையூறாயிருக்கின்றாளென்று கொல்லவும் நினைத்து ஒருநாள் அடுத்த ஊரில் நடக்கும் ஒரு சிறப்பைத்தன் மனைவிக்குக்காட்ட விரும்பினவன்போலக் கபடுசெய்து அழைத்துக்கொண்டுபோய் நடுக்காட்டிற் கொன்றுவிட்டான். மறுபிறப்பில் அவள் ஒரு பிசாசாயினள். புருஷன் செட்டியாகப்பிறந்தான். அந்தச்செட்டியை அப்பிசாசு உபாயமாகக்கொன்றுவிட்டது. "மாறுகொடு பழையனூர் நீலிசெய்த வஞ்சனையால் வணிகனுயிரிழப்பத் தாங்கள்,கூறிய சொற் பிழையாது துணிந்துசெந்தீக் குழியிலெழு பதின்மர்களு முழுகிக்கங்கை,யாறணிசெஞ் சடைத்திருவாலங்காட்டப்ப ரண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப், பேறுபெறும் வேளாளர் பெருமை யெம்மாற் பிரித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ" என்பதனாலறிக.

(ச) இது சிவாஞ்ஞையாமென்று விபூதியைக்கண்டு அடியேன் சேரனென்கின்ற ஆகாயம்வரைக்கும் பரந்த கீர்த்தியையுடைய சேரமான் பெருமாள் நாயனார் அரசுசெய்த மலைநாட்டில் ஒளிவீசும் ஆபரணங்களையுடைய வணிகர்சுள் மைத்துனஉரிமையைப் பேண மிக்க முறைமையையுடையது பெரியதொண்டைநாடு. 'கொத்தலர்கோதை

வியன் சேரமண்டலக் கொம்மைபத்தன்பால், வைத்திருந்தாங்கவடன் கேளிர் நேடிவரவவர்க்கே, யுய்த்திருவோர்க்கும் வரிசையுமாற்றி யுடனுஞ் சென்று, மைத்துனக்கேண்மை படைத்ததன்றோ தொண்டை மண்டலமே" என்பதனுலறிக.

(௫) நஞ்சுவிளங்கிய கண்டத்தையுடைய சிவபிரானிடத்தே விரும்பும் முறைமை முற்றும்படி உமை தருமஞ்செய்ததினுல் சந்திரனை உரோஞ்சும் மதிலையுடைய நகரங்கள் பொருந்திய பெரிய தொண்டைநாடு மற்றை நாடுகளினும் தருமமுறை பொருந்துமெனன உலகத்திலே ஒருவார்த்தையை யுடையது.

(௬) தொண்டை நாட்டிலுள்ள மலைகளின் சாரல்களிலிருந்து குற்றமற்ற மணிகளோடு அருவியாறுகள் இறங்குகின்றன; முல்லை நிலத்தில், மலர்களில் வண்டின் கூட்டங்கள் புதியதேனை உண்பன; மருதநிலத்திலே தடாகங்களிலிருக்கும் நீண்ட கயன்மீன்கள் வரம்புகளழியத்தாவுகின்றன; நெய்தநிலத்திலே பரத்தியர்களால் முத்துக்கள் பரப்பிக்காய இடப்படுகின்றன. நீவல்-பரப்பல்.

(௭) குறிஞ்சிநிலத்திலே வேடுவர்களால் நிலஞ்சமஞ்செய்து பலரத்தினங்களை அரித்துத் தினைவிதைக்கப்படும்; முல்லைநிலத்திலே கறவைப்பசுக்கூட்டம் மானோடு பொருந்துவன; மருதநிலத்திலே புட்கள் தாமரையிலிருந்திருலையுண்பன; நெய்தனிலத்திலே சுறவின் முள்தெய்வத்துக்கறிகுறியாக வைத்து உற்சவஞ்செய்யப்படுகின்றன;

(௮) கூட்டமாகிய மலையினிடத்தே ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற மேகங்கள் இரத்தினங்களைச் சொரிகின்றன;முல்லைநிலத்தின் பக்கத்தில் குளிர்ந்த பூங்கொத்துக்களையுடைய கொன்றைமரங்கள் தமது மலராகிய பொன்னைச்சொரிவன; மருதநிலத்தின் பக்கத்தில் நீர் விசையாகச்செல்கின்ற வாய்க்கால்கள் அந்நிலத்திற் சிறுபெண்கள் விளையாடி இறைத்த முத்துக்களைத்தள்ளிக்கரையில் ஒதுக்குவன; நெய்தநிலத்தில் தோணிகள் தாழைகள் செறிந்த துறைமுகத்திலே யானைகளைக்கொண்டுவந்து விடுகின்றன.

(௯) மலைகள் செறிந்த சிற்றாரிலுள்ளவர் தேனையும் நிறைந்த செந்தினை மாவையுங்கொடுப்பர்; நெடியமுல்லை நிலத்துள்ள பாடிகள்

பால்வார்த்துச்சமைத்த புல்லரிசிச்சோற்றை உடையன; குளிர்ந்த நீர்த்துறைகளையுடைய மருதநிலத்தார் சுத்தமாகிய செல்லரிசிச் சோறு, நெய், கரும்பு இனிய பழமாகிய இவைகளையுடையன; நெய்தனிலத்தூர்கள் மீனுல் பேருணவினையுடையன.

(௧௦) குறிஞ்சி நிலத்திலே கூந்தலிலுள்ள வண்டுகள் குறிஞ்சி யாழிசைபோல ஒலிப்பன; முல்லைநிலத்திலே தயிர்த்தாழிகள் கார்போல முழங்க முல்லைகளரும்புகின்றன; மருத நிலத்திலே மழலைச் சொற்களையுடைய கிளிகள் மருதமரத்திற் பொருந்திய கூடுகளையுடையன; நெய்தனிலங்கள் நிழலையுடைய தாழைகள் சூழ்ந்த நெய்தற் கொடி பொருந்திய கழிநிலத்தையுடையன.

(௧௨) அழகிய இடமகன்ற சுவர்க்கத்துள்ள தெய்வப்பெண்களுடைய கரியகூந்தலிலுள்ள வண்டுகள், பொலிந்த ஆபரணங்களை அணிந்த தனங்களையுடைய வேடுவப்பெண்களது கூந்தலில் வீழ்ந்து மணமிகுதியினுலே பின்போகமாட்டா; சிவந்த கண்களையுடைய விட்டுணுவாகிய இடபத்தையுடைய சிவபெருமானெழுந்தருளி யிருக்குந் திருக்காளத்தி என்கின்ற மேகங்கள் பொருந்திய மலைநிறைந்த பல வளங்களினுலே பெருமையை அடையும்.

(௧௪) வரைப்பின் - இடங்களையுடைய.

(௧௫) அழகிய முல்லையுங் குறிஞ்சியுஞ்சேர்ந்த பருக்கைக்கற்களையுடைய மேடாகிய சில இடங்கள், நீலநிறம் பொருந்தியவாட்படையையுடைய துர்க்கையின்கோயில்களும் பரர்பிவேனிற்காலத்தே கடிய பகற்பொழுதைச்சேர்ந்து பாலையென்று சொல்லுமாறு பொருந்துவன.

(௧௬) சொல்லப்படும் எல்லையின் புறத்தனவாய பூங்கொத்திலுள்ள வண்டுகளை அலைக்கின்ற பலபெரிய நீரையுடையகான்யாறுகள் இடைஇடையே பரத்தலால், கொல்லைகளிலுள்ள குருந்தமரங்களின்மேற். படர்ந்த பொலிவாகிய பந்தராகிய மேன்மைபொருந்திய புதற்செடிகளிலிருக்கு முயல்கள் அதற்குப்பயந்து எழுந்து தம்மைக் காத்தற்குரிய இடங்களில் அடங்கும்; நீண்ட முல்லைநிலத்து.

(கள) முல்லைகள் பாலசந்திரன்போன்ற நெற்றியை யுடைய இடைச்சியரது பற்களைக்களவுகொண்டதென்று களாமரங்கள் அலரைத்தூற்றும். அத்தன்மையை முல்லைச்செடிகள்பார்த்து அப்பெண்களுடைய கூந்தலைப்போலப்பழுக்கின்ற அக்களா மரங்களை நோக்கி களாவாகிய தமக்கும் அத்திருட்டுண்டென்று எதிரேசிரிப்பன. அலர் தூற்றல் —பழித்தலும், மலர் சொரிதலுமாம். சிரித்தல்—நகைத்தலும், பூத்தலுமாம். தமக்குமுண்டு என்றது களம்பழம் கூந்தலின் கருமையைத்திருடினதாகக்கருதிய திருட்டை. களவு என்பது அரும்புக்கும், களவு என்பது பழத்திற்கும், முதல், சினை ஒற்றுமைநயம் பற்றி அபேதமாகக் கூறப்பட்டன.

(கஅ) மான்குலங்களெங்கு மெங்குமுள்ளன; கொடிகளெங்கு மெங்குமுள்ளன; இடைக்கு-இடைந்த; முல்லைநிலத்தின் கடவுளென்று அகப்பொருணூல் கூறும் விட்டுணு தொழுந்திருமுல்லை வாயிலென்னுஞ் சிவஸ்தலமும் அவ்விடத்து.

(கசு) மாறில்லாத கங்கையானது தானே சொரிகின்ற திருமஞ்சனத்தைத்தர அணைந்து ஊறுகின்ற நீரையுடைய ஒளிபொருந்திய மலர்களையுடைய திருவூறலென்னுந்தலத்தை, வேறுகத்தன்னுடைய பெரிய சேமநிதியைப்போலப்பெற்று முல்லைநிலம் விளங்கும்.

(உ0) மணம்பொருந்திய மிருதுவான மலர்கள் நிறைந்த முல்லை நிலத்தைச் சூழ்ந்த மருதநிலத்தில் வீசுகின்ற தெளிவாகிய திரையையுடைய பலநதிகள் மிக உயர்ந்துபோய்ப் பசிய இலையையுடைய தடாகங்களிலும் தாமரைகள் பொருந்திய வயல்களின் பக்கங்களிலும்.

(உக) துங்கமாதவன் - வசிட்டமுனி. பால் - பாலி என்னும் பெயரைக்கொண்டு.

(உஉ) குழந்தை கையாற்றடவப் பெருகுகின்ற பாலைச்சொரியும் முலையையுடைய தாயைப்போல மள்ளர்கள் வேனிற்காலத்தே மணற்றிட்டைகளைக் கிளைத்துக்கையால் வருட, ஊறிய வெள்ளமாகிய நீண்ட வயலிலுள்ள நீர்மடையை உடைக்கும்.

(உங) குளங்களிற் கட்டப்பட்ட காவலாகிய மதகின்வாயைத் திறக்க, கால்வாய்களினூற் புறம்போய் மள்ளர்கள் ஆரவாரிக்க நீரை வழங்கும்.

(உச) நடுபவருமாகிய இவர்களுடைய.

(உரு) நீர் வருகின்ற பெரிய கால்வாய்களை வாளைமீன்கள் குறுக்காக அணைபோல மறிக்க, பெரியகரையானவை அழிந்து விலங்குவன; பிரகாசமுள்ள நீரையுடைய வயல்களில் நெருங்குகின்றசேன் மற்சங்கள் நெடிய கரையை ஒன்றின்மேலொன்றாகப் படுத்துயர்த்துவன; பருத்தவரால் மற்சங்களின் கூட்டம் மதகுகளினின்றும் நீர் வருதலை அடைப்பன.

(உசு) மருதநீர்வைப்பில் வரம்பையுடைய விசாலமாகிய வயலில் எழுந்த செந்தாமரையாகிய படுக்கையி லெவ்விடங்களினும் கருப்பத்தால் இளைத்த சங்குகள் நித்திரைசெய்வன; அவை, உண்டாக்கிய பச்சொளி விளங்குகின்ற நீண்ட ஆகாயத்தில் பரிவேடத்தாற் சூழப்பட்ட பூரணசந்திரனைப்போன்றுள்ளன. தாமரையிலை ஆகாயம்போன்றும், தாமரைப்பூ பரிவேடம் போன்றும், சங்கு மதிபோன்றும் இருந்தன என்பதாம்.

(உள) அக்கமுகின் பக்கம், நீண்ட குலையையுடைய தென்னை மரங்களும், பழைய வாழைகளும், அழகியபலாவும், தூங்குகின்ற இனியபழங்களையுடைய மாமரங்களுமாகிய இவைகளின் சோலைகளை வேலியாகவுடையன.

(உஅ) வளவிய பழைய ஊர்கள், நெடிய குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த நீண்ட பக்கங்களையுடையன; நெற்கூடைகள் நெருங்கியஇருப்பிடங்களையுடையன; விருந்தை எதிர்கொள்ளும் பெருமைதங்கிய பெருங்குடிகளுடைய இல்லறம் விளங்குகின்ற மாடங்கள் உயர்ந்த வீதியையுடையன.

(௩௦) தீக்கலி - ஓரசுரன். நாதர் தாமருள்புரிந்தது - சிவபெருமானநுக்கிரகஞ்செய்தற்கிடமாயிருந்தது. நல்வினையையேதமக்குப் பிரயோசனமாகச் செய்கின்ற கற்புள்ள பெண்களிடத்தேபிற

ந்த முறைமையுடைய பிராமணர்கள் வாழ்கின்ற திருவல்லம் என்னுந் தலமானது விபூதியையும் ருத்திராக்ஷத்தையும் புகழ்ந்த அழகோடு விளங்கும்.

(௩௪) பருவி ஓடை - பருத்த பூக்களையுடைய ஓடை. வீ-குறுக்கல் விகாரம் பெற்று நின்றது. வீ-பூ.

(௩௫) களம்பாடிய - நெற்களத்தைப்பற்றிப்பாடிய.

(௩௬) துறையவர் - கரையார்.

(௩௬) சுழிக்கின்ற நீரையுடைய கடல்வெள்ளமானது சூழ்ந்து தரித்துக்கொள்ளக் கடற்கரைவழிகளிலுள்ள புன்னைமரங்கள் பொதிந்த பொன்போன்ற புட்பங்களை அவிழ்த்துவிடுவன; வாசனைபொருந்திய நெய்தற்பூவிலுள்ளதேனை வண்டுகளுண்ணக் கழிக்கரையிலேயுள்ள மடலையுடைய தாழைகள் பொதிசோற்றை அவிழ்ப்பன. விழித்தல் - அலர்தல்.

(௩௭) காயல் - உப்பளம். புரைநெறி - துவாரவழி. முட்கனி எனமாறுக. ஆய - வெண்மையாகிய. அன்னங்கடாவிய துறைகளின் முன்னுமுள்ள சுற்றிடத்தைச்சூழ்ந்த பனிப்பூவின்றுது வெண்மையான நண்மணலின் வெண்மையை மறைப்பன.

(௩௮) வாவுகின்ற நதிசூழ்ந்த இடத்திற்கு முன்னரே குடிகள் பயிலுமிடத்திலே தோளியர்தாம் காயும்படி பரப்பிய கயல்களுள்ளே தங்கள் விழிகளாகிய கயல்கள் தவிரக் கழியிடத்திலுள்ள கயல்களை விலைசெய்கின்ற இனிமை பொதிந்த சிலவாகிய நிரம்பாமொழிபோலும் மேன்மையான மொழிகளின் நன்மையைப்போல்வன; செவ்வழிப்பண்ணை இசைக்கும் யாழிசைகள்; இப்பண் நெய்தனிலத்திற்குரியது.

(௪௦) பணியணிந்தவருடைய மயிலாப்பூர் வான்மியூர் முதலாகிய பதி அளவிலாதன ஆண்டுள்ளன. ஆதலினாலே அந்நெய்தல் இவைகளைத் தன்னிடத்துடையதாகப் பெற்றுக்கொள்ளும்படி முன் செய்துகொண்ட நிறைதவஞ்சிறியதோ. ஓ-எதிர்மறை.

(௪௧) கோடு - சங்கு. மல்லையேயனையவாக. இருநிலம் புணர்ந்த இடங்கள் பல ஆண்டுள்ளன. வளருமியல்பினாற் புணர்நிலமெ

ன்க. இதுமலையை யுடைத்தாய்க் கடற்கரையிலிருப்பது; அது பற்றி இதனை உவமித்தார்.

(௪௨) உகைப்பவும் நிகர்ப்பவுமாய் அணைவனவாய அனேகமிடங்கள் ஆண்டுள்ளன. மான் முல்லைக்கருப்பொருளாயினும், கருமான் சாதி குறிஞ்சிப் பொருளேயாம். தளை - வரம்பு. வயல் - மருதம். பணை-மருதம்.

(௪௩) அணைந்தும் இணைந்தும் கலப்பனவாய அனேகமிடங்களுள்ளன.

(௪௪) அளித்துச் சிவலும் சேவலும் மாறி வாங்கியும் எயிற்றியருடைய அவரை ஏனலுக்குக் கழிச்சியர் பவளமுத்தளந்தும் இங்ஙனமாக இருநிலமுங்கலந்துள்ள இடங்கள் அநேகம் ஆண்டுள்ளன. கழிச்சியர் - பரத்தியர். ஒழுக்கம் - இடம்; ஆகுபெயர்.

(௪௫) இயைவனவாகப் பலமருங்கு ஆண்டுள்ளன. பயில-பயிலும்படி. வயலும் - மருதமும்.

(௪௬) மடங்குதிரை முன்னரே கொழித்தமுத்தும் கமுகம்பாளையுகுத்த பூவும் கலத்தலினுற்பரத்தையர் உழத்தியர் மகளிரும் மாறுய்த்திரட்டி விளையாடு மியல்பிற்றாய இருநிலமுங் கலந்துள்ள இடங்கள் அனேகமாண்டுள்ளன. பணை-மூங்கில்.

(௪௭) இத்தன்மையவான நான்கு நிலங்கள் அமைந்திருத்தலோடு தத்தமரபிற் கடுத்த இயைந்த செய்தொழில்களையுடையபல வேறு சாதிகள் விளங்கித் தீயனவற்றைக்கனவினும் நினையாச்சிந்தனையையுடைய தூயமாந்தர் வாழ்கின்ற தொண்டைநாட்டு மேன்மையினியல்பு எளியேனாற் கூறிமுடிக்கும் அளவினையுடையதோ. ஒஎதிர்மறை. தொண்டைநாடு தூயமாந்தரை யுடையதென்பது, "வேழமுடைத்து மலைநாடு மேதக்க, சோழவளநாடு சோறுடைத்துப், பூழியர் கோன்-றென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர்வயற்றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து" என்பதனானுமுணர்க.

(௪௮) நாட்டிடை வியப்ப எனக்கூட்டுக. எவ்வுகங்களினும் அழியாதது என்று. கை-ஒழுக்கம்.

(௪௯) அம்பிகை தம்பெருமானை வழிபட்டுவைத்த மேன்மை பூண்ட ஆன தொன்னகர்ப்பெருமையை யறிந்தவா விளம்பில் எனக் கூட்டுக. இச்செய்யுள்ல், அறிந்தவாவிளம்பில் என்பது இவ்வாறும் என வருஞ்சரித்திரத்திறுதியின் முடியும்.

(௫0) வேணியார் கைலேயில் வீற்றிருந்தருளி அருள்செய உலகையாளுடையாள் அவரைத்தொழுது திறனெலாந்தெரியக்கேட்டருளினுளென முடிக்க. தெள்ளுவாய்மை - சத்திநிபாதர்க்குத் தெளிவாய வாய்மை.

(௫௧) இறைவர் - எழுவாய்.

(௫௨) அங்கண்-அருட்கண். இயல்பினுல்-விதியினுல்.

(௫௩) தக்ஷிணதிசைசெய்தமிக்கதவத்தால் அடைவதும் என்று முள்ளதுமாகிய காஞ்சிநகர் ஒன்றுள்ளது. அதனுள் மாமரத்தை விரும்பிய நங்கோயிலேயடைந்து நீ ஈண்டு விரும்பிய பூசனையைச்செய்வாயென்றேவப் பிரியாவிடைகொண்டு இசைந்தாள். அமர்தல்-விரும்பல். இருக்கை-கோயில். இசைவு-விடை.

(௫௪) எண்பத்துநான்கு நூறுயிரம் யோனியுள்வைத்த பலபேதமாமுயிர்களும் புரந்தருளும் ஏதமில்கருணைப்பிரான் மொழிந்த ஆகமவிதிப்படி போகுங்குணத்தோடு தொழுதுசெல்ல. பேணல்-கருதல்.

(௫௫) துன்னும் வானவர் முதலாகப்பல ஆன்மாக்களும் தம்முடன் சூழ்ந்துவர உமை காஞ்சிநகருள்வர. மகாபதுமனுகியநாகம்.

(௫௬) வரம்பிலின்பம் முதலிய அறுகுணங்களேயுடைய சர்வான்மாக்களிடத்தும் வைத்த அருளேத்தன்னுள்ளே கர்ப்பமாகக் கொண்ட சிவலிங்கத்தைத் தாபித்து, அதற்குப் பூசனேவிரும்பிச்செய்ய, சர்வவியாபகர் என்று கருதி யாவரும் எங்கும் நாடவும் ஏகமாயுள்ள முதல்வர் ஓர் திருவிளையாட்டால் எதிர்ப்படாதொழிய, அதற்றவஞ்செய்து காண விரும்பினுர். அளவிலின்பம்-வரம்பிலின்பம்.

(௫௭) தஞ்சம்-புகல். மூலம்-அடி. கணவர் தரிப்பரே, காணத்தோன்றினுர் என்க.

(ருஅ) தான்செய்த இத்தவப்பயனாகிய தம்பெருமானைக்கண்ட பொழுது. தாழ-பிடரிற்றாழ. காதல்-அன்பு. முன்பு செய்யும்படி கருதிய பூசையைச் செய்யுங்கொள்கையை மேற்கொண்டு.

(ருகூ) ஆன - சிவபூசைக்கு விதித்த. பூம்பிடகை-திருப்பூங் கூடை.

(சா0) எம்பிராட்டி நிறைவான சிந்தையில் உண்மையாக நீடிய அன்போடு வேண்டினமலரும் மஞ்சனமும் பூச்சும் தீபதூபங்களுமாகிய இவைகளெல்லாவற்றையும் சேடியர் வேண்டும்போ துதவ, ஆகம விதியெலாமெய்தப் பூசித்தார். மெய்ப்பூச்சு-சந்தனக்காப்பு. மெய் தரும்படி-உண்மையாக. வேண்டும்போது - வேண்டிய வேண்டிய போது.

(சாக) வல்லி உணர்ந்து பெருகப் பேரன்பால் பணிந்தெழுகின்ற பூசை சிவபிரான் திருவுள்ளத்தங்கீகரிக்கும்படி நாடோறும்பெருகியது. கரந்தரும்பயன்-கைவசப்படும்பயன் கையைப்பெற்றபயன்.

(சாஉ) உள்ளஞ்செய்தார். திருவிளையாட்டில் - திருவிளையாட்டால். ஓதம் - திரை.

(சாங) அண்ணலாருள் வெள்ளத்தை நோக்கி-அண்ணலார் வரும்படி யருளிய கம்பா வெள்ளத்தைப்பார்த்து; அருள்வெள்ளம் போலும் நீர்வெள்ளமெனிலுமமையும். பெருமான்மேல்-பெருமானிடத்து. மீதுவந்துறும்-மேல்வந்து மூடுறும். காதலுடன்-அன்போடு. தடுக்க-வெள்ளத்தைத் தடுக்க.

(சாச) தழுவ-அவ்வல்லியைத் தழுவுதற்கு விழைந்த கொள்கையினராகிய அவர் முலைகட்கும் அம்மேனிகுழைந்து காட்டினார். மெத்தென-மென்மையாக. கொள்கையினார் வினையாலணையும்பெயர். கொலைக்களிற் றுரிபுனைந்தமேனி என்றார்; வன்மையான மேனியென்பது தொனிப்பித்தற்கு.

(சாரு) சரமும் அசரமுமான தேவர்முதலாகிய உயிர்கள் ஏகாம்பரானவர் தங்காதலி தழுவத் தம்மேனி குழைந்ததைக் கண்டு உயிருமுடம்புமுருகி ஒன்றாகிப் பிராட்டிக்கு ஏகாம்பரர் என்றும்மென்மையரானாரென்றேத்த, விண்ணானது மலர் மழையை நிலநிறையப்

பொழிய, கம்பாநதி பெருகுதலொழிந்து தாழ்ந்தது. வத்த, பொழிய என்னுஞ் செயவெனெச்சங்கள் வணங்கியதென்னும் வினைமுற்றைக்கொண்டு நிகழ்கால முணர்த்தின. காமாக்ஷியம்மையாரது கோபங்கண்டஞ்சிக் கம்பாநதிபெண்ணுக உருவுகொண்டுவந்து வணங்கிய தென்க.

(சுசு) கருத்தால்-கருத்தோடு. வரம்-மேன்மை. ஈன்றளித்த-ஈன்றுகாத்த.

(சுஎ) தம்-தமது. மாது-அந்தமாது. மலர்ந்தசெந்தாமரை போலும் பாதத்தின்கீழ்.

(சுஅ) அருள்செய்யவேண்டும். இஃதன்றியும் இங்குள்ளார் தேவரீர் திருவடிக்குப்பிழைத்தலொழிய வேறுசெய்வினைகள் வேண்டினவற்றைச் செய்யினும் (அவற்றைக்கருதாது) பெருகிய பெரியதவப்பிரயோஜனத்தைக்கொடுத்தருளவும் பெறவேண்டுமென்றனள்; ஆன்மாக்களின் பிறப்பொழிப்பவள்.

(எக) இல்லறத்தைச்செய்யும் கிருபையினுலே உயிர்கள் விருத்தியுறும்படி புரக்கும் புண்ணியமயமாகிய யாவரும் நாடுகின்ற விருப்பின் மிக்க வாழிடமாகிய கோட்டம்.

(எரு) கன்னிகாப்பாகிய இந்நகர் வரைப்பிலுள்ள காஞ்சிநதிக்கரையின் மருங்கானது பிறையணிந்தவருடைய கோயிலோடு விளங்கியதானமேவிய மேன்மையுமுடைத்து. கன்னிகாப்பு-அழியாதமதில் எனினுமாம்.

(எசு) முனிவர்பூசனை செய்ய வானவர்முதலிய உயிரெல்லாம் அர்ச்சனைசெய்ய அவரவர் விரும்பிய காமியங்களை அருளி இறை உவந்தருளிய க்ஷேத்திரம் அளவில்லாதன அத்திருநகரெல்லையிலுள்ளன. முறைமை-ஆகமவிதி.

(இன்னும் வரும்.)

ஜி. சதாசிவம்பிள்ளை.

புராதன இந்தியா.*

[பங்களூர்ஸ்ரீமான்-எஸ். கிருஷ்ணசாமிஐயங்காரவர்கள்,M,A. எழுதியது.]

கி. பி. 700 வரை யுள்ள சரித்திரப்பொது நோக்கு.

நந்தேயத்துப் பழஞ்சரித்திரத்தை யறியமுயல்வோர்க்கு இன்றி யமையாத காரணங்களில் முதன்மையானது சில முக்கியமான இலட்சணங்களைக் குறிப்பிடுவதேயாம். ஏனெனில், இவ்விஷயங்களை ஆராயப்புகும் பிற அனேக நுண்மையான நிகழ்ச்சிகளைக் கூட்டி யொருங்குபடுத்தற்கு இவை அனுகூலமாகும். இப்படிச் செய்வதில் விஷயங்கள் தங்கள் தங்களிடங்களில் நின்று பார்வைக்கு நன்கு புலப்படுவதோடுகூட, வரலாற்றின் குறைவுபாடுகள் வெளிப் பட்டு முன்னிடாமல் ஸ்தூலமான காட்சி யுடைத்தானதாகும். ஆகையால் இக்காலத்தினின்று பின்னோக்கும் நமக்கு ஆரியர்கள் குடியேறிய காலத்திய இந்திய சரித்திரம், நம்மிமயமலை போலவே தூரதிருஷ்டிக்கு எல்லாம் சமமாகத் தோன்றுகிறது. சரித்திர வோலை வெள்ளோலையாயுடைய ஜனங்களின் வாழ்வு நல்வாழ் வென்று கார்லையில் (Carlyle) சொல்லிப்போயினர். இக்கொள் கையைமேற்பூண்டு நஞ்சரித்திரவெறுமையில் ஆநந்த மடைவோமா னால்அது வெற்று மயக்கமேயாம். ஆகையால் இன்றைய என்வியாஸத்தில் இத்தேய சரித்திரத்தில் முன்னதாக நிற்கும் பொதுநோக்கம் ஒன்றையே கொடுக்க யத்தனித்து, மற்றொருகால் இதை விவரிக்க லாமென்ற எண்ண மேலீட்டால் முன்னின்றேனாயினேன். 'குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல் கற்றறிந்த மாந்தர் கடன்'—

ஆரியர்கள் முதற்குடியேறியிருந்தது எவ்விடமேயாயினுமாகுக. அவ்விடமிருந்து அவர்களைத் தொடர்ந்து வருவது நஞ்சரித்திரத் திற்கு அவசியமாகும். இதிற் பெரும்பான்மைவிஷயம் புறமான இந்திய சரிதமாகும். ஆயினும் ஆரியர்கள் இங்குக் குடியேறிய பிறகு, அவர்கள் செய்த காரியங்களை விளக்க இப்புறஇந்தியச் செய்திகள் இன்றியமையாதனவே. இக்காலத்தைப் புறஇந்தியக்

* இவ்வியாசம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஏழாவது வருஷோற்சவ சமயத்தில், படிக்கப்பெற்றதாகும்.

காலமென்றும் சுமார் கி. மு. 3000-வருடத்தியதென்றுங் கொள்ளலாம். இக்காலக்கூற்றில் ஆரியர்கள் இந்தியாவின் எல்லைவரை வந்து குடியேறி, மேய்ப்பு வேளாண்மை யென்னு மிரண்டு தொழில் பூண்டவர்களாய், தம்மினத்தாராகிய இராணியர்களினின்றும் வேறுபாடடைந்து, ரிக்வேதத்திய ஆரியர்களுக்கே உரித்தாய சில இலக்கணங்களை யடைந்து நாகரிக அபிவிருத்தி பெறுபவர்களாயிருந்தார்கள்.

இவ்விடம் பெயர்ந்து அகல்கையில் நம்மெல்லையைக் கடந்து இந்தியா தேசத்துட் புகுந்து பஞ்சநதப் பிரதேசமான பஞ்சாப் தேசத்திற் குடியேறிப்பரவினார்கள். இங்கேதான் முதன் முதல் ஆரியர்கள் இத்தேசத்திய பூர்வ ஜனங்களுடன் கைகலந்து, அவர்கள் நாட்டைக் கவர்ந்து கொள்ளும் முயற்சியி விருதாரத்தார்க்கும் பெரும்பூசல் விளைந்தது. முதிர்ந்து, வண்மைபெற்ற நாகரிகமுடைய ஆரியர்கள் அவ்வளவு முதிர்ச்சியடையாத நாகரிகமுடையவர்களான தேச ஜனங்களைத் தோல்வியடைவித்தது சாதாரணமே. இப்பஞ்சநதத்திற்றான் ஆரியர்கள், ரிக்வேதத்தினின்றும் புலப்படுகிற கலப்பற்ற நாகரிகத்தையும் அடக்கமான இன அமைதியையும் நிருமாணம் செய்தவர்களானார்கள். இந்நாட்டு வளப்பமும், குடிகளின் செழிப்பும், இத்தேயத்து வெளியே நின்று இவ்வளவு நாகரிக வளர்ச்சியடையாத புறவாரியர்களுக்குட் களிப்பையும் மனக்கவர்ச்சியையும் கொடுக்க அவர்கள் வரவைத்தடுக்க வியலாமல், யுத்தஞ்செய்த பின்னப்பட்டுப் பஞ்சநத வாரியர்கள் கீழ்ப்புறம் பரவத்தொடங்கி கங்கை யமுனையாற்றிடைக் குடியேறினார்கள். இவ்வாரியப் பரப்பின் செய்கைகளெல்லாம், கி. மு. 2500-லிருந்து கி. மு. 1500-வரையென்று ஒருவாறுகொள்ள இடமுண்டு.

தம்மினத்தாராகிய கிரேக்கு ஜனங்களைப் போலவே இவ்விந்திய ஆரியர்களும், தாங்களடைந்ததேசசீரிக்கும் அதிகாரவியவகாரநிலைமைக்கும் தக்கபடி விருத்தியடைந்தவர்களானார்கள். கங்கா யமுனை வாற்றிடையரங்கத்தில், ஆரியர்கள் வண்மை வாய்ந்த ஜனஸமூகங்களாக வொருமித்து, கிரேக்கர்களைப் போல் நகர ஆதிபத்தியத்தையே முடிவாக் கொள்ளாது, அகன்ற நாட்டையும்

வண்மை வாய்ந்த குடிமையையும்பெற்ற பெரியராஜ்யாதிபதிகளாய்ப்பிரிவு பெற்றார்கள். ஏனெனில் இத்தேய மகன்ற சமபூமியாயிருப்பதினாலேயே போலும். இங்கேதான் மகாபாரதத்தில் விவரிக்கப்பெற்ற, ஓரினத்தார்க்கும் மற்றோரினத்தார்க்கும் விளைந்த பெரும் போர்கள், நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதற்கு ஐயமில்லை. இக்கால நிகழ்ச்சிகளுக்கு இதனாற்றான் பாரதகாலமென்றே சரித்திர நிபுணர்கள் பெயரளித்தார்கள். இப்பிராந்தியத்தினுள் ஆரியர்கள் பஞ்சநதத்துப் பூர்வஜனங்களைப்போற் பெருங் கதையினின்று தெரியவரும் நாகரிகம் பெறாத ஜனங்களாயிருந்ததன்றி, சிறந்த நாகரிகம் வாய்ந்த இந்திய திராவிடர்களோடு சம்பந்திக்கவும் வேண்டியதாயிற்று. இங்கே, கிரேக்கர்களுக்கு அட்டிக்கா (Attica) பியோஷயா (Baeotia) என்னும் தேயக்கூறுகளில் வாய்ந்தவண்ணம், ஆரியர்களுக்கும் நிகழ்ந்தது. அதாவது திராவிட பூமியை யபகரிக்கஇயலாமல் அவர்களோடு கலந்து வர்ணஸங்கரமடைய வேண்டியதாயிற்று. இந்நிகழ்ச்சிகளெல்லாம் கி மு. 1500-னின்றும் கி. மு. 1000-வரையென்று கொள்வது தற்காலசரித்திரநிலைமைக் கேற்றதாகத் தோன்றும்.

இங்கிருந்து கீழ்ப்புறம் ஆரியர்கள் பரவியது முன்போல் குழுமிச்சென்று, குடியோட்டிக் கொள்ளைகொண்டு நாட்டைக் கவருவதற்கன்று. இது முடியாதபடியால் இவர்கள் சிறு கணங்களாய்ச் சென்று கங்கைக்கு அக்கரையிலிருந்த ஜனங்களினிடையே குடியேறி அவர்களோடு கலந்து வாழ்ந்தபோதிலும், தங்கள் பாஷையையும் நாகரிகத்தையும் மாத்திரம் மேற்செலுத்தியவர்களானார்கள். இப்படி கங்கைக்கு இக்கரையில் கௌரவ பாஞ்சாலர்களைப்போல அக்கரையில் கோஸலவிதேகர்கள் முதன்மை பெற்றார்கள். இங்குத்தான் இராமாயண கதை நிகழ்ந்தது. இவ்வாறு ஆரியர்கள், சிறு குழுவாய்ப் பரவியது முதலான செய்திகள் கி. மு. 1000-முதல் கி. மு. 750-வரையென்று பெறப்படும்.

மனித முயற்சியின் பாகுபாடுகளின் கூறுகளில், இத்தேயம் மேன்மைபெற்று விளங்கக் காரணமான மதம் கல்வி யிவைகளில் ஆரியர் பெருமுயற்சி நிகழ்ந்தது இக்காலத்ததேயாகும். வே

தகாலத்துக்கு முற்பட்டஆரியர்கள் கர்ணபரம்பரையாய் வந்த தங்கள்நிகழ்ச்சிகளையெல்லாம் தங்களுடன் கொணர்ந்து சாவகாசமாய்ப்பஞ்சநதத்தில்இக்காலவரையறையில் விவரித்தனர். காலக்கிரமத்தில் இவைகள்தான் வேதமந்திரங்களாக விளக்கம்பெற்று நின்றன. வெகு காலங்கழியவே இவைகளைத் தெளிவுறுத்த வெகு விரிவான வியாக்கியானங்கள் வேண்டுவனவாயின. இவ்வியாக்கியானங்களுக்குத்தான் பிராம்மணங்களென்று பெயர். இவைகள் வெகுவாய்ப் பயிலப்பெற்று அப்பயிற்சியின் முடிவே அரண்யங்களாய் நின்றதோடு இவ்விசாரணையிலேயே உபநிஷதங்களும் பிறக்கவியன்றது. இவ்வாறான வேதப்பயிற்சியின் வேறுபாடுகள் விரிவுற்று நிலைபெற யாம் இதுகாறும் பிரஸ்தாபித்த காலமெல்லாஞ் செலவாயின. இவ்வளவேயன்றி, வேதங்களையும், வைதிக கர்மங்களையுமறிந்து பயில்வோர்க் கின்றியமையாததான சில சாஸ்திரகாணங்களும் நிருமிக்கப் பெற்றன. இவைகள்தான் கல்பம், சிக்ஷை, சந்தஸ், வியாகரணம், நிருத்தம், ஜோதிஷம் என்னும் ஆறுசாஸ்திரங்கள். இவைகள் பிராம்மணங்களிலேயே சுருக்கமாய்க் குறிப்பிடப்பட்டு இவ்வேதாங்கங்களில் விரிவையும், சாஸ்திரவமைதிக் கிணங்கிய வுருவையும் பெற்றன.

வைதிக நூல்கள் இவ்வளவு விரிவு பெறவே, உழன்று பயில்வோர்க்கு உதவிசெய்வதற்குச்சூத்திரங்களாய்த்தொகுத்துக்கூறலத்தியாவசியகமாயிற்று. ஏனெனில், எழுத்துக்கள் இவ்வளவில் நிருமிக்கப் பெற்றிருந்தபோதிலும் சாமான்யமா யுபயோகத்திற் கொண்டாளப்பட்டதாகத் தெரியவில்லை. இச்சூத்திர காலக்கூறு மிதன்பிற் கூறும் ஒன்றிலொன்று பரவுவதால் இரண்டும் ஒழுங்குபட கி. மு. 750-முதல் கி. மு. 350-வரை யடங்கிய நாலு நூற்றுண்டுகளாவது வேண்டும். ஆனால், கி. மு. 750-வரைக்கும் நமக்குக் கிடைக்கும் விஷயமெல்லாம் வைதிக கிரந்தங்களினின்றுமே ஆய்ந்தெடுக்க வேண்டியதாயிருக்கிறது. இவ்வைதிககிரந்தங்களையோவெனின் தேர்ந்த பயிற்சியுடையோர் வெவ்வேறு காலத்தனவாக முரண்பட்டுக் கூறுவோராயினர்.

ஆரியர்கள் உத்தா த்ருவ வலயத்துக்குட் பட்ட தேயத்தினின்றும் புறப்பட்டவர்களென்றும், ரிக்வேதத்திய பழமையான மந்திர

ங்கள் ஆக்கப்பட்ட காலம் சுமார் கி. மு. 7000-மென்றும் புகன்றனர் போலும். திலகமஹான் ஐரோப்பிய வித்வான்களேவெனின், இவை சுமார் கி. மு. 1500-ம் வருஷத்தியவே யென்பர். முற்கூறியவர் தங் கொள்கைக்கு சில ஜோதிஷ விஷயங்களே காரணமென்றும், இக் கொள்கையின் றிப்புராதனமான சில மந்திரங்களின் கருதது விளங் கல் அசாத்தியமென்றும் கூறுவர். சதபதப் பிராம்மணத்தில் ஒரு பால் கிருத்திகை நக்ஷத்திரத்தில் சைத்திர விஷு ஆரம்பமென் னும் குறிப்பைக்கொண்டு காலஞ்சென்ற சங்கரபால கிருஷ்ண தீக்ஷ தர் அப்பிராம்மணம் கி. மு. 3800-ல் ஆக்கப்பட்டதாமென்பர். அவ் வாக்கியமே பிற்காலத்தில் எழுதப்பட்டு அப்பிராம்மணத்தில் இடை யிடப்பட்டதென்பர் தீபா என்னும் வேதவித்யாநிபுணர். இவர்கள் இவ்வாறு முரண்படுவதால் நிச்சய மிவ்வாறென்று நிரூபிக்க வியலா மலிருப்பதோடு காலவரையறை அசாத்தியமாய் நிற்கிறது. ஆயி னும் இக்காலக்கூறுபாட்டின் கீழ்எல்லை தவறில்லை யென்பதற்கு நாம் எதிர்நோக்காத கால இணக்கமொன்று கிடைக்கிறது. எப்படி யெனின், கிரேக்கதேசத்திய தத்வஞானிகளில் சிறப்புற்றோங்கியபை தாகொராஸ் (Pythacoras) என்பவர் இத்தேயத்திலிருந்துதான் ஆன் மாக்களுக்குப்பல பிறப்புண்டென்னும் கொள்கையையும், சாங்கியத் தினின்றும் எண்ணின் தத்துவத்தையும் அறிந்தனரென்ப. இவர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் விளங்கியவராவர். (Goldstrucher) கோல்டு ஸ்டரக்கா, பாண்டார்க்கார், (Bhandarkar) என்னும் வித் வான்கள் கொள்கைப்படி ஆரியவையாகரணரான பாணினியென்பே ரிப்பூமியை யலங்கரித்தகாலம் ஏறக்குறைய இக்காலமே யென்பர். அப்படியாயின், அக்காலத்திற்றான் நந்தேயத்திய தென்பாற்கும், வடபாற்கும் சரித்திர சம்பந்தம் ஒருவாறுண்டாகிறது. எப்படி யோ வெனின், அகத்தியத்துக்கும் பாணினி வியாகரணத்துக்கு முண்டான சம்பந்தத்தால்.

கி. மு. ஆறாம் நூற்றாண்டு தொடங்கி நம் சரித்திர வாராய்ச்சி வெளித் தேயத்தினின்றும் விளக்கம் பெறுவதால் சிறிதுமட்டுட் உறுதிகொடுக்கும். கி. மு. 750-க்கு இருபாற்றான சதமானங்கள் ற்றான் ஆரியர்கள் விந்தியத்தைச் சூழ்ந்த மகாகாந்தாரத்தினுட்பு வாரம்பித்தார்கள். அகத்தியர் தென்புலம்புக்க கதைக்கு இச்செ

தியே காரணமென்ப. பூவிவரண விஷயங்களில் இராமாயணம் பிழை யற்றதாகக்கொள்ள வியலுமானால், இக்காடு பம்பாஸரஸ் வரைக்கும் பரவியதாகக் கொள்ளவேண்டும். இத்தடாகம் அப்போது ஹம்பே (Hambe) யென்னுமிடத்தில் இருந்திருத்தல் வேண்டுமென்பதற் கையமில்லை. இக்காலத்துத் துங்கபத்திராநதியுடன் கலந்திருக்கும் குளமொன்றைப் பம்பாஸரஸ் என்று காண்பிக்கிறார்களாம். அகத்தியரேதான் தென்பால் காடழித்து, நாடுசெய்ய முயன்றவராவதோடு தமிழ் இலக்கணங்களில் முதன்மையான அகத்தியமாக்கி போரென்ப. இவ்வகத்தியர் ரிஷியேயாகுக. இல்லாவிடில் வேறு பெரியோரேயாகுக. இவர்தாம் வடவாரியத்துக்குப் பாணினி செய்த பேருதவியைத் தமிழுக்குச் செய்தவர். அகத்தியத்தினின்றும் இக்காலத்து எடுத்தாளப்பட்ட சில மேற்கோள்களிலிருந்து அகத்தியர் பாணினிமதத்தை யாட்சேபிப்பதாகத் தெரியவருகிறது. ஆகையால் ஆரியர்கள் தென்பாற் குடியேறிய காலமும், ஆரியக் கல்விப்பெருக்கைச் சூத்திரங்களாகத் தொகுத்த காலமும் ஒன்றே யாகக் கொள்வது இல்லதுகோடலாகாது.

வடக்கு, தெற்கு என்று இருபகுதியான இத்தேயம் ஒருவாறு அமைதிபெறும் தருணத்தில், வைதிக சடங்குகளின் மேலீட்டால் ஆரியமதமே யழிந்து மறைவுபெறவே, ஆராய்ச்சிவாய்ந்த ஆன்றோர் மதவிஷயங்களைப்பற்றிச் சிந்திக்க வேண்டியதாயிற்று. ஆகையாற்றான் இதே கி. மு. ஆறும் நூற்றாண்டில் சிறப்புற்றோங்கிய இருபெருமகான்கள் நந்தேய மதஸ்திதியைத் திருத்தஞ் செய்வதற்கு மூல புருடர்களாயினர். அறிதற்காய மறைப்பொருளின் தத்துவ விசாரத்தில் பெரும் பெயர் பூண்டு உயர்ந்தோங்கிய ராஜரிஷிஜனகர்சிறப்புற்றோங்கி, இத்தத்துவ விசாரத்தை அத்யுன்னதஸ்திதிக்குக் கொணர்ந்ததும் இயல்பாய் வளம்வாய்ந்ததுமான பிரதேசத்திலேயே இவ்விருபெருமக்களுஞ்செழிப்புற்றோங்கின ரென்பதும்யாவரும் அங்கீகரிக்கத்தக்கதேயாம். இந்துதேசத்திய இவ்விருபெரும்புதல்வர்கள் ஜைன்மத உத்பத்தி புருஷரான மஹாவீரவர்த்தமானரும், பௌத்த மத நிர்வாஹகரான கௌதமசாக்கிய முனிவருமேயாவர். இவ்விருவரிற் பிற்பட்டோருடைய உபதேசங்களும், அவைகள் சாதாரண ஜனங்களுக்கே தெளிவுபடுத்த வேண்டுமென்னும் அவர் எண்ண

மும் தேசபாஷைகளின் வளர்ச்சிக்கு வழிவாய்ந்த காரணங்களாய்க் கிடந்தன வென்பது எல்லோருமங்கீகரித்துள்ளவையே. இத்தேயத்தின் வடக்கெல்லையிலுண்டான இப்பிரபாவத்துக்குத் தெற்குமுனையினின்றும் பிரதிசம்வாதம் பிறந்தது; எப்படியோவெனின், தக்ஷிணபதம் என்னும் பெரும்பாதையால் தண்டகாரணியம் பிளவுபெறுமுன்னமே உத்தர இந்தியாவுக்கும் தக்ஷிணத்திற்கும் கடல்வழி நிலைபெற்றிருந்ததனாற்றான். சரித்திர அத்தியாயிகளுக்குப்பௌத்தருடைய அவதாரம் வேறொரு அனுகூலத்தையும் செய்ததாயிற்று. என்னெனில் பௌத்தமதத்தினாற்றான் இத்தேயம்ஆனந்தமயமான தனிமையினின்று விலகி இப்பூமியிலிருக்கும் மற்றத் தேயங்களினிடையே தனக்கிணங்கிய நிலைமையை யடைந்து சிறப்புப் பெற்றது. ஆயின், இன்னுஞ்சிலநூற்றாண்டுகள் கழிந்தபிறகு தான் இந்நிலைமைபெறல் சாத்தியமாயிற்று.

ஆரியாவர்த்தத்தினெல்லையினின்று, வர்ணஸங்கரம்பெற்ற ஆரியர்களால் குடியேறப்பெற்ற மகதராஜ்யம் பௌத்தமதம் முற்படவே, உயர்வுற்றோங்கியது. இவ்விராச்சியத்துக்கு ராஜதானி கேகய ராஜதானியான ராஜக்ரகமும், இராமாயணத்தில் விவரிக்கப்பெற்ற வைசாலிபுமரம். சிசுநாக அரசவம்சத்திய பிம்பசாரனும், அவன் மகனான பிதிர்ஹத்திப் பெரும்பழிபூண்ட அஜாதசத்ருவென்பானும் பௌத்தருக்குச் சமகாலத்தவர்களாயிருந்தார்கள். பௌத்தர் நிர்வாணம் பெறுமுன்னமே பௌத்தமதம் இந்தியதேசமுழுதும் பரவியதன்றி, பௌத்தவுபதேசங்கள் பிக்கு, பிக்குணிகளால் வெளித்தேயங்களுள்ளும் பரவத்தொடங்கின.

மதச்சீர்திருத்தமுயற்சியாளர்களிவ்விருவரும் விளங்கியதும், மகததேயத்தின் உயர்நிலைக்கு முதலானதுமான விக்காலக்கூறு வெகுகாரணங்களால் மேன்மைபெற்றது. இந்நாட்களிற்றான் கிரேக்கதேசத்தில் தர்மாபிலே (Thermopylae) பிளேடியா (Plataea) என்னும் போர்களில் நூலுடையும், பிரம்புவில்லும், அயமுனையூட்டிய அஸ்திரங்களும் பூண்டு இந்தியசேனையின் ஒருகூறு போர்புரிந்ததாகத் தெரியவருகிறது. ஸ்கைலாக்ஸ் (Skylax) என்னும் கரையதேசத்திய (Carian)நாவிகத்தலைவன் வல்லாண்மையால் நிருமிக்கப்பெற்ற ஸிந்

துநதியையே கிழெல்லையாயுடைய டிரையஸ் ஹிஸ்டாஸ்பிஸ் (Darius hystaspes) என்னும் பாரஸீக சக்கரவர்த்தியின் இருபதாவது மண்டலாதிபத்தியமே இதற்குச்சாதனமாகவேற்பட்டது. இந்நாவிநன் ஸிந்து நதியிற் படகோட்டியதும், மேற்கண்ட இருபதாவதாதிபத்தியம் நிலைபெற்றதும் கி. மு. 510-ல் என்ப. இக்காலத்தில் இந்தியாதேசத்தில் 'வடவாரியர்கள்' பதினாறு அரசுகளாயும், ஸ்வராஜ்யம் பெற்ற வனேக குழுக்களாயும் பிரிவுபெற்றவராயிருந்தனர். ஏனெனில், எல்லோராலுமங்கீகரிக்கப்பட்டவாரிய வரவேயன்றி, வேறிருவழிகளாலுமவர்கள் பெருகிப்பரவினரென்று தோன்றுகிறது. இவைகளிலொன்று இமையவரையினடிவாரத்ததாயும் மற்றொன்று ஸிந்து நதியின் கரையையொட்டியதாகவும் தெரியவருகிறது. சுதந்திரம் பெற்ற இவ்வினத்தாரோ, கங்காநதிக்குக்கீழ்ப்பட்ட தாழ்வரைகளிலும், பஞ்சநத ஆற்றங்கரைகளின் மேற்பாகங்களிலும் வாழ்ந்தோர்களாவார். இக்குழுக்களிலநேகம் 'ஸந்தாகாரம்' என்னும் பொதுமாளிகைகளில் கிரமிய இனக்கூட்டத்திற்கே ஆட்பட்டவரானார்கள்.

இக்குழுக்களில் இங்கு நாம்பிரஸ்தாபிக்க வேண்டுவது ஒன்றே. ஏனெனில், அதுமுன் அரசவாட்சிக் கடங்கியிருந்ததாகத் தெரிய வருகிறது. அஃது இப்போது திர்ஹூட்(Tirhut)என்று பேர்பெற்ற மிதிலைதேசமே. இத்தேசத்தியவரசராய ஜனகமஹாராஜாவின்பெயர் முன்னமே பிரஸ்தாபம் பெற்றுளது. இவ்விதேகர் வஜ்ஜியப்பெருங் குழுவின் ஒருகூறாய் நின்று பௌத்தமதம் உயர்ந்தோங்கியகாலத்துக்குடியாட்சிபெற்று ராஜாவென்னும் பெயரால் கிரேக்க, ரோமக வதிகாரிகளாய் ஆர்க்கன், கான்ஸல் என்பவருடைய நிலைமைபெற்ற இனத்தலைவ ராதிபத்தியத்திற்கு உட்பட்டவர்களாயிருந்தார்கள். வட.விஹாரதேயத்திய, ஒருகுழுக்கூற்றின் அதிகாரி வம்சத்திற் றோன்றியவரேயாம் பௌத்தர்.

(இன்னும் வரும்.)

ஆத்மவிசாரணை.*

[கீழக்கரை மகா-ள-ள-ஸ்ரீ: ஜோஸப்டையாஸ் அவர்கள் எழுதியது.]

:o:

மக்களா லாய பெரும்பயனு மாயுங்கா
லெத்துணையு மாற்றப் பலவானால்--தொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்
கிடந்துண்ணப் பண்ணப் படும். (நாலடியார்)

அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனு மாற்றவே கொள்க-கரும்பூர்ந்த
சாறுபோற் சால்வும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு. (நாலடியார்)

முத்தொழில் புரியுந் தன்வயத்தனாகிய முழுமுதற் கடவுள் ஆதியிற் பஞ்சபௌதிகமான அசேதன சடப்பொருள்களைச்சிருட்டித்த பின்னர், அப்பஞ்சபூதங்களும் அடங்கச்சேதனப்பொருள்களாகிய மனிதரைப்பரிச மொன்றையே யுணரும் ஓரறிவுயிர்களாகிய புன் மரமாதியவைகளுக்கும், பரிசம் இரசம் இவ்விரண்டையும் உணரும் ஈரறிவுயிர்களாகிய சிப்பி, சங்கு முதலியவைகளுக்கும், பரிசம் இரசம் கந்தம் இம்மூன்றையும் உணரும் மூவறிவுயிர்களாகிய சிதல் எறும்பாதியவைகளுக்கும், பரிசம் இரசம் கந்தம் உருவம் இந்நான்கையும் உணரும் நான்கறிவுயிர்களாகிய தும்பி வண்டாதியவைகளுக்கும், பரிசம் இரசம் கந்தம் உருவம் ஒலி இவ்வைந்தையும் உணரும் ஐயறிவுயிர்களாகிய யாடு குதிரை பசு முதலியவைகளுக்கும் இறைவனாகவும் நன்கிது தீதிது வெனப்பகுத்தறியுந் திட்பமாகிய ஆறறிவுடையராகவு மேற்படுத்தி, மேனோக்குடையராய் விதிவிலக்குகளை யறிந்து அறநெறியொழுகி முத்தி சாதனத்தை அடைவானமைத்தன ரென்பது மாந்த ரெவர்க்கும் ஒருதலை.

விலங்கினங்களோ அவ்வறநெறியொழுக விதிவிலக்குகளை யறியும் பகுத்தறிவின்றிப் பிரபஞ்ச மொன்றற்கே யுரியனவாய் மக்கட்குபயோகமாகக் காணப்படுகின்றன. ஆன்மாவின் ஞானப்பிறப்

* இவ்வியாசம் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் எழாவது வருஷோத்சவ சமயத்தில் ஆசிரியராற்படிக்கப்பெற்றதாகும்.

பையும், திவ்ய விலக்ஷண மகிமையையும் உள்ளவாறு உணர்ந்தாரெவரும் கணப்பொழுதில் அழியும் நிழற்சாயலான வுலகின்மீதும் அதின் மருட்டுதலாகிய செல்வத்தின்மீதும் இயற்கையாகவே அமைந்து அடர்ந்து படரும் மனப்பற்றை வேரோடுகளைந்து இடையறு மோக்ஷபதவியிற் றமது தலைவனாகிய தற்பரனோடு ஊழியுள்ளகாலம் உடன் வாழ்ந்திருப்பரென்பது ஒருகாலும் மாறுபடாத வுண்மையே. நிலையற்ற வுலகின்கட் காணப்பட்ட நடப்பன பறப்பன ஊர்வன இருப்பன யாவும் இவ்வாறுபதென நிதானிக்கவும், சோதி மண்டலத்தில் சூரிய சந்திர தாரகைகளுடைய உதயம் அஸ்தமன சடிகைப்பிரமாணம் கிரகணம் பூமி சக்கிரவாளத்தின் நீளம் அகலம் உயரம் தாழ்வு இவைகளைக் கணித சாத்திரவிதிப்படி இறையும் பிசகாது கணிக்கவும் போற்றலுடைய நுண்மதியராயினும் தம்மான்மா எவ்வாறுபதென்றும், அதன் மகிமை வல்லமை யெப்பிரமாணமென்றும் எப்பிரமாணமெனினும் விசாரிப்பவராயும் கேட்பவராயும் இல்லராய்ப் பிரபஞ்சத்துட் சுழன்று, மதிமயங்கிக் கண்டுங் குமாந்தர், மரணமாகிய விழிப்புவருங்கால், அடையுநிலைகேடான பெருந்துயர் அம்மம்ம! தவிர்க்கப்பாலதோ? நாடு, நகர், சாதி குலம் இனம் முறை முதலியவற்றை வினவப்பட்டான் நிரக்ஷரகுக்ஷியான பேதையிற் பேதை யெனினும் நானறியேன் என விடையளிப்பனோ? தன்னையுந் தன்னான்மாவையும் அறியேனெனச் சொல்லும் அசடனுக்கிணை சொல்லுந்தரமுளதோ? ஆன்மாவின் மகிமையை யாவற்றினும் முதலாக விசாரித்தலன்றோ கடன்.

மனிதனுடைய, ஆன்மா கடவுளின் ஆலயமும், பீடமும், அபாவசுரூபமும், திவ்யவிலக்ஷணமுமாக விருக்கின்றது. தேவத்துவத்துக்கு அக்ஷய சூக்குமமாதிய ரூபமும், மனோவல்லமையும், நீங்காதமகிமையும், நிலைத்திருக்குமாறு ஆன்மாவினுக்கும் அவ்வாறுயமகிமையும் வல்லமையும் உண்டாயிருக்கிறதொழிய அவ்வான்மா கடவுளின் பிரதிபிம்பமாகவுமிருக்கின்றது. தேவாலயத்தை யிடித்தழித்துச் சுரூபங்களைக் காலாலுதைக்கின்ற துட்டனைக்கண்டார் எவரும் கண்ணிற் கனற்பொறிகதுவக் கதமுற்றுமனம்வருந்தாதிருப்பரோ? அவ்வாறு கடவுளின் மெய்யான சுரூபமுங் கோவி

ஞமான நமது ஆன்மாவிற் பசாசங்குடிகொண்டு காலாலுதைக்கின்
றதைக் கண்ணுற்றும், கடிதுவிலக்க முயலாதிருத்தல் விபரீதமே!
அளவுகணிக்கப்படாத இரத்தினமொன்றைப் பணிச்செப்பிலடை
த்துக் கொடுத்த விடத்து, உயர்ந்த அம்மணியை வெளியிலெறிந்து
பணிச்செப்பொன்றினையே பதனம்பண்ணுபவனைத்தும், சிவிகை
யூர்ந்த எஜமானை வீழ்த்தி வெறும் பல்லக்கைச் சுமந்து செல்பவனைப்
போலவும் நம்மையாக்கிக் கொள்ளுகிறோம். ஆன்மாவாகிய அளவு
கணிக்க வமையாத அருமணியைப் பணிச் செப்பாகிய உடலிலே
யும், எஜமானனென்கிற ஆன்மாவைச் சரீரமென்கிற பல்லக்கி
லேயும், கடவுள் வைத்துக்கொடுக்க, ஆன்மாவைச் சட்டைபண்
ணாமல் எறிந்துவிட்டு, ஒன்றுக்கு முதவாத வுடலைப் போற்றி வளர்
த்து, நீராட்டி, மினுக்கிப், போஷணை பண்ணுகிறோம். ஒரு துருப்பு
ச்செத்தை வீட்டில் விழுகிறதைக்கண்டு, அது விழாமற்றடுக்கும்படி
கண்ணுற்றுங்கிக்கொள்ளுகிறவனுண்டோ? இவ்வித மதிகேடு யாமே
செய்துகொள்ளுகிறோம். அழியாத ஞானவாழ்வைப் பெற்றுய்வான்
வேண்டி இவ்வுடலைவாட்டி, ஐம்புலனடக்கி, உபாசித்துக் கதிக்குமு
தியாகிய அறத்தை விரும்பிச்செய்யாது, கீழ்ப்போன சரீரவிச்சை
யின்படி நடந்து, ஆன்மாவைக்கெடுத்து, நரகவேதனைகளை யனுப
விக்க வழிபண்ணுகிறோம். உலகவாழ்வை யிழந்து போகாதபடி
முத்திவாழ்க்கையை யிழக்கத்துணிகிறோம். மண்ணாங்கட்டிக் காசை
ப்பட்டு மகாதிரவியங்களைக் கைவிடுகிறோம். நம்முடைய ஆன்மா
வை நம்முடல்போல எண்ணாது கைவிடுகிறதுந்தவிர நாமுடுத்து
கிற உடுப்புப்போல வென்றாவது, வளர்க்கிற நீசமிருகங்களைப்போல
வென்றாவது, வீடு வாசல் தோட்டந் துரவுபோல வென்றாவது
எண்ணாமற்போகிறோம். நம்மாடைகளை அழுக்குப்போக வெளுப்
பிக்கிறோம். வீடுவாசல்களை நாடோறும் பெருக்கிச் சுத்தம்பண்ணு
கிறோம். சுவர், தரைகளைத் தீற்றி மெழுகுகிறோம். தோட்டந்துர
வுகளைக் களைபோக்கிச், செதுக்கித், திருத்தி, நீர்ப்பாய்ச்சுகிறோம்.
ஆயினும், நமதான்மாவின் எவ்வாறாய பாபவழுக்குள் அடைந்
திருந்தபோதிலும், யாதொருசுத்திகரஞ் செய்பவுமில்லை. ஆன்ம
போஜன் மாகிற நன்மைகளைத் தேடவுமில்லை. தனக்கு ஊழி
செய்யவோரடிமையை விலைக்கு வாங்கி, அந்த வூழியனைச் சிம்

மாசனத்தில் வீற்றிருக்கச்செய்து, அந்தத் தொண்டனுக்குப் பணிந்து சொற்கேட்டுக் கால், கை, கழுவித்தொண்டு செய்பவனுண்டோ! கடவுள் நமது ஆன்மாவையாண்டவன் போலவும், இவ்வெஜமானுக்கு ஊழியம் பண்ணச் சரீரத்தையும், அதிலுள்ள பஞ்சேந்திரிய அவயவங்களையுங் கொடுத்திருக்க, நாமுறைபிறழ்ந்து, நாமுமுடலை நாயகன்போல் விசாரித்து ஆன்மாவையடிமை யாக்கி, மண், பெண், பொன்னாசைகளைக் கொண்டு ஆளப்பண்ணுகிறோம். திரவியந்தேடவென்றாலும், வயிறுவளர்க்கவென்றாலும், கப்பலேறி யாத்திரைபண்ணித், தீவு தீவாந்தரங் கட்குப்போகவும், மலைகள் கணவாயேறி வெந்நாடு ஈத்தேசமுஞ் சுற்றவும், கல்லு, முள்ளு, காடு, செடிகள் ஒன்றும் பாராமற் றண்டித்துச் சேவகத்திலமர்ந்து, உயிரை முதலாயிழக்கத்துணிகிறோம். ஆன்மாவைக்குறித்து யாதொரு பலனைச் சம்பாதிக்க வேண்டுமென்றாலோ இருந்த இடம்விட்டு அசையத்துணிவதுமில்லை. ஆன்மாவை யடிமையாக்கிச், சரீரத்துக்கு வணங்கிநடக்கிற போதே நம்மைவந்தடையுங் கேடு பாடுகள் மிகப்பலவாம். பாய்மாவூர்ந்தான் தானேறிய மாவைப் புரிவுடன் அடக்கியாளமாட்டாமல் அதனிச்சையின்படியே ஓடவிட்டால், மேடு பள்ளங்களில் விழுந்து, அவ்வூர்ந்தானை வீழ்த்தி, யூறுபண்ணு மன்றோ? தன் சரீரந் தனக்கடங்காமல் தன்னையாண்டபோது சம்பவித்ததைப்பார்ப்போம்." நீனு (Neenu) வென்கிற அரசன் "செமீராமீஸ்" (Semiramis) என்கிற தன் வெள்ளாட்டியை மோகித்து, அம்மோகந்தலைமண்டைக்கேற, அவளைப்பார்த்து, உனக்குவேண்டியதைக் கேள் தருவேனென்றான். அதற்கு அத்தொண்டு செய்பவள் எனக்குவேறொன்றும் வேண்டாம்; ஒரு நாள் மட்டும் இராச்சியபாரம் பண்ண வுத்தரங்கொடுத்தால் போதுமென்றாள். அவ்வாறே அரசன் ஆஞ்ஞாபிக்க அவள் சிம்மாசனத்தில் ஏறினவுடனே மந்திரி, பிரதானி, சேவகர்களை யழைப்பித்து, வேந்தன் தலையை வெட்டுவித்தனளாம். அடிமைக்குடன் பட்டு, அவளுக்குக் கொடுத்த அதிகாரத்தினால், இராச்சியத்தையும், ஜீவனையும், இழந்தான். க்ஷணப்பொழுதேனிலைக்குஞ் சந்தோஷத்திற்காய்த் தன்சரீர விச்சைகளுக்குக் கீழ்ப்படிந்த அவ்வரசனுக்கு அவ்வாபத்து நேர்ந்தால், எஞ்ஞான்றும்

த்துக்கு நீச அடிமையால் அ[illegible]களுக்கு அடங்கி அன்புபாராட்டும் அந்தகனுக் கெய்தும் ஆபத்துகளுக்கு அளவுண்டோ.?

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைசற்றம் வாழ்நாண்மேல் வைவருதல்
வைகலை வைத்துணரா தார். (நாலடியார்)

தன்னைத்தானறிதல்.

—:o:—

வாரா யென்மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து
தீராத சுழல்காற் றற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்
போராத காலநேமிப் பிரமையாற் றிரிவன் போதம்
ஆராயுந்தன்னைத் தானென் றறியு மவ்வள வுந்தானே'
"தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங்கண்டானேல்
பின்னையத் தலைவன்றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத்தீர்வன்"
"இன்னது தேகந் தேகி யிவ னென வுணர்வன்யாவன்
அன்னவன் றன்னைத் தானென் றறிந்தவனாமென்றார்.' (கைவல்லியம்.)

அஞ்ஞானமாகிய பாவமயக்கத்தை விட்டொழியத்தக்கதாகப் பிரதமத்தில் தன்னைத்தான் அறிதல்வேண்டும். தன்னை யறிந்தால் தன்னைப் படைத்த தலைவனையுமறிந்து, அவரால் ஆன்மாவிற்கு வேண்டிய முத்திநன்மைகளையும் பெறலாம். பூர்வீக கிரேக்கதேசத்தில் விளங்கியிருந்த "ஏழு ஞானிகளுக்குள் ஒருவனான தாலேஸ் என்பவனிடத்திற் கற்றுக் கொள்வதற்கு பகா வருத்தமான சாத்திரம் எது" என்று கேட்டதற்குத், தன்னைத்தானே யறிந்து கொள்ளுவது சகலத்தினும் வருத்தமான சாத்திரமாகும். ஏனெனில், இந்தச் சாத்திரத்தை நாம் கற்றறியாதபடி சுயசிநேகம் ஊறுபண்ணுமென்றான். இதனிமித்தம் "உன்னை நீயே யறிந்துகொள்" என்கிற சுலோகம் பூர்வீக சாத்திரிகளுக்குள்ளே வழங்கி வந்தது. இன்னும் வேறொரு ஞானசாத்திரி ஞானத்தைச் சுருக்கமாகக் கற்றுக்கொடுப்பதற்காக "உன்னோடு குடியிரு" என்கிற வாக்கியத்தைச் சொல்லிக்கொண்டு வருவான். தவிரவும் கிறிஸ்துவஞான சாத்தி

ரிகளாகிய அர்ச் அகுஸ்தீன் அர்ச்பெருநற்தீஸ் என்னு முனிவர்கள் மனிதர் கற்றறிந்த சகல கல்வி கலைஞானங்களைவிடத் தன்னைத்தானே அறிந்துகொள்ளுதல் மேலான கல்வியென்றும், பிரயோசனமுள்ள கலைஞானமென்றுந் தீர்மானித்தார்கள். அர்ச் அகுஸ்தீன் (St. Agustin) இதைப்பற்றிச் சொல்லுகிறதாவது:— "வானம் பூமியின் குணநுணங்களை விளக்கிக்காட்டி வானபண்டலங்கள் அசைந்தாடுகிற விதத்தையும் கிரகங்களின் ஓட்டத்தையும் அவைகளின் வல்லபங்களையும், கற்றுக்கொடுக்கிற சாத்திரத்தை மனிதர் கனமாக எண்ணுகிறார்கள். ஆனால், தன்னைத்தானே அறிந்துகொள்ளுகிற அறிவு இதற்கு மேலான சாத்திரம். இதைவிடப் பிரயோசனமான அறிவு" மேலும் அர்ச் (St. Paul) சின்னப்பர் இதைப்பற்றிச் சொல்லுகிறதாவது:— "மற்றச் சாத்திரங்களெல்லாம் நம்மை அகங்காரியாக்கிக் கெடுக்கும். ஆனால் நம்மை அறிந்துகொள்ளுகிற சாத்திரம் நம்மைத் தாழ்த்தி நம்மை நல்லவர்களாக்கும்." அவலட்சணமான பெண் தன் முகச்சாயலை முகக்கண்ணாடியில் பார்க்கவிரும்பாததுபோல, ஆன்மசுத்தியில்லாதவர்கள் அருவருப்பான தங்கள் குற்றங்குறைகளை யுற்றுநோக்க விரும்பார்கள். இதைப்பற்றிக் கடவுள் பேரால் அர்ச் பெர்நர்தூஸ் (St. Pernardiz) சொல்லுகிறதாவது:— "மனுஷனே நீ யாரென்று உற்று விசாரித்தால் நமக்குப்பிரியப்படுவாய்; உனக்கு நீதானே அருவருப்புள்ளவனாவாய். ஆனால் நீ யுன்னை யுற்றுவிசாரியாததினாலே நீ யுன்பேரில் பிரியப்பட்டு, நமக்குப் பிரியமில்லாதவனாய்ப் போகிறாய். ஆனால் நமக்கும் உனக்கும் நீ பிரியப்படாத காலம்வரும். நீ பாவஞ் செய்ததினாலே அப்போது நமக்குப் பிரியப்படாமற் போவாய். உனக்கு நீதானே நித்தியக்கேட்டை வருவித்துக் கொண்டதினாலே உன்பேரிலும் பிரியப்படாமற் போவாய்." தாழ்ச்சியுள்ளவர்கள் தங்களிடத்திலுள்ள குற்றங்குறைகளை யோசிப்பதினாலே பிரயோசனப்படுவார்கள். அகங்காரிகள் தங்களிடத்திலுள்ள, நன்மையை யோசிப்பதினால், அதைத்தங்களுக்குத் தீமையாக்கிக் கொள்ளுவார்கள். எவ்வாறெனில்: சாப்பாடு எவ்வளவு நல்லதாயிருந்தாலும் அதை மிதமிஞ்சித் தின்றால் தீங்கை விளைக்கும். சில நஞ்சு, எவ்வளவு கெடுதலாயிருந்தாலும், அதைத் தகுந்தவிதமாய்ப் புடமிட்டுத் தகுந்த சமையத்திலுண்ண, அது சிறந்த ஔடதமாகும்.

(இன்னும் வரும்.)

சிவமயம்.

யாப்பருங்கலக்காரிகை விருத்தியுரை.

உத்தமமோனைக் கட்டளைக் கலித்துறை,

———:o:———

பொன்னைத் துரந்து பொருகா ரிகையுரைப் பூவிருத்தி
தன்னைப் புலவர் தனிக்கரும் பென்னத் தவத்தமைத்தான்
றென்னைத் தமிழொடு சேர்வட நூற்கட றேக்கியுண்ட
சுன்னைக் குமார சுவாமிப் புலவர் தொழுஞ் செம்மலே.

உலகத்துவழங்கும் பாஷைகளெல்லாம் வரம்பிகந் திறவாது, அவற்றை வரையறுத்து வழுக்களைந்து நிறுத்த வல்லதிலக்கணமே யாம். அவ்விலக்கணம், பாஷைகடோறும் அவ்வவற்றிற் கியையச் சிறப்புவிதிகளிற் சிறிது வேறுபாடுடையதேயாயினும், பொது விதிகளிற் பெரும்பாலும் பொருத்தமுற்றே விளங்கும். நாவுக்குஞ் செவிக்கும் இனிமை பயக்குஞ் சிறப்புடைமை நோக்கிக் காரணக் குறியாகக் கூறப்படும் நமது தமிழ்ப்பாஷை, எழுத்துச் சொற்பொருள் யாப்பணி என்னும் ஐந்திலக்கணங்களையுடையது. அவ்வைந் திலக்கணங்கட்கும், பண்டைக் காலத்துத் தொல்லாசிரியர் பலர், தனித்தனியே விரிவான பற்பல நூல்களைச் செய்திருந்தார்கள். காலாந்தரத் தவையெல்லா மிறந்தொழியத், தொல்காப்பிய முதலிய சிற்சில நூல்களே இக்காலத் தெஞ்சியுள்ளன. பிற்காலத்து, ஆயுளும் விவேகமுமருகி, நோய்கள் பெருகி, அறிவுகருகி வருதலிற், கரைகாணற்கரிய கடல்போற் பரந்த நூல்களையும் உரைகளையுங் கற்போரின்மையிற், பிற்காலத்தாசிரியர்கள், பஞ்சலக்கணங்களையும் இலகுவிலுணருமாறு தனித்தனி நூல்களாக வமைத்துப்போயினர்.

பின்னர்த் தமிழ்க்கல்வியை விருத்தி செய்துவந்த தமிழரசர் போயொழிய வேற்றரசர் வந்து புகுந்தமையின், அவர் பாஷையாகிய ஆங்கில நூல்களையே சீவனோபாயநிமித்தம் நம்மவரெல்லாங் கற்றுவருதலிற் றமிழ்ப்பாஷையைப் பேசுதற்கு மியலாது முட்டுறு

லரேயாயினர். பின்னர் இலக்கணக் கல்வியைக் குறித்துப் பேசக் கிடப்ப தென்னெனின் பஞ்சலக்கணங்களுள்ளே எழுத்துச்சொல்லாகிய இரண்டனையும் நன்னூலார் நன்றாக விளக்கியுள்ளார். இக்காலத்துள்ளார் புலவர், அவற்றைப்பின்னரும் விளக்கிப் பல உரைகளையும் இலகுபோத வசனங்களையும் எழுதி வெளிப்படுத்துவாராயினர். பொருள், யாப்பணி என்னும் மூன்றனையும் முறையே விளக்கி நம்பியகப் பொருள், யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்கார மென்னு நூல்களிருந்தன. நன்னூற்குரை செய்தவாறு இந்நூல்களுக்குந் தெளிவுரை செய்வாரொருவரைக் காணப் பெறாமையின், எழுத்துச் சொற்களேயன்றி ஏனை மூன்றிலக்கணங்களையுங் கற்பார் இக்காலத்தரிதேயாயினர்.

இங்ஙனமேயாக, இவ்வரிய பெரிய குறையை நிறைவேற்றிப் பெரும்புகழ்பெறுதற்குத் துணிந்தெழுந்தவர், நமது சிரமித்திரராகிய சுன்னைக் குமாரசுவாமிப் புலவரவர்களே. நம்புலவரவர்கள் இளவயதிலே நன்னூல் விருத்தியுரையை நம்மோடுடன் கற்றவர். சிலேடை மடக்கு முதலிய அலங்காரங்களமைத்து வெண்பாப்பாடுதலில் அக்காலத்திலே பெரும்புகழ் படைத்தவர். ஒழுக்கத்திலுங் கல்வியிலும் விசேடதிறமை வாய்ந்துள்ளாரென ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களினாலும் புகழ்ந்து பாராட்டப்பெற்றவர். வடமொழியைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்தலிலும், இருமொழிகளையுங் காலநீட்டிப்பின்றிச் சூட்ச முறையின் மாணவகர்க் கூட்டுதலினு மிணையற்ற ஆற்றல் பெற்றுள்ளவர். யாருஞ் செயற்கரிய உலகோபகாரமான இருபத்தைந்துக்கு மேற்பட்ட நூல்களையும் உரைகளையு மியற்றிப் பெரும்புகழ்படைத்தவர். உள்ளத்திலே நற்குணமுங் கல்வியுமே நிறைந்திருத்தலின், ஒளியுள்ளவிடத் திருளணுகத் துணியாதவாறு தீயகுணங்கள் புகுதற்குத் துணிந்தணுகப் பெறாதுள்ளவர். தம்மிடத்தடைந்தோரெவரேயாயினுமென், அவரையுபசரித்துத் தம்மாலியன்ற உதவியைத் தவறாதெப்பொழுதுஞ் செய்து வருபவர். இறுமாப்பையும் இடம்பத்தையுங் கனவிலாவது கண்டறியாதவர். "மெலியது மென்மே லெழச்செல்லச் செல்ல - வலிதன்றோ தாழுந் துலைக்கு" என நங் குமரகுருபர சுவாமிகளருளிச்செய்தவாறு, எப்பொழுதும் நிமிர்ந்ததலையோ டிறுமாந்து திரியும் அற்பக்கல்வியாளர்

கண்டு நடுங்கி நாணி யொதுங்குமாறு தாழ்ந்த நடையையு மினிய மொழியையு முடையர். குமாரசுவாமிப் புலவரென்ற பெயர்மாத்திரையே கேட்ட வேனைப் பெரும் புலவர்களெல்லாம் சிங்கேற்றின் ஆர்ப்பரிப்பைக் கேட்ட யானைகளைப்போல் ஏங்கி யடங்கி யொடுங்கத் தக்க ஆழ்ந்து நிரம்பிய கலையறிவை யுடையர். அடக்கி மிகச்சுருக்கி விளக்கப்புகிற் "கற்க கசடறக் கற்பவை கற்றபி-னிற்க வதற்குத் தக" என்னும் நாயனார் வாக்குக்கு முழுவிலக்கியமாயுள்ளவர் நம்புலவரவர்களேயென்று துணிந்து கூறத்தக்கது. விரிவஞ்சி யீண்டொழிக்கப்பட்ட நம்புலவரவர்களது வேனைய இலக்கணங்களெல்லாம், மிகச்சுருக்கி விளக்கிய இவ்விலக்கணங்களைக்கொண்டு விவேகிகள் உய்த்துணரத்தக்கனவேயாம்.

மேலே விளக்கிய இலக்கணங்களெல்லா நிரம்பப் பெற்ற நம் புலவரவர்கள் வெளியிட்ட நூல்களுள்ளே, இதன்முன்னர் வெளிப்பட்ட தண்டியலங்கார வுரை மிகவிசேடமுடைய தொன்றேயாம். கற்றபண்டிதர்களையும் பொருளிதுவென்று நுழைந்து கண்டுபிடிக்கவியலாது மயக்கும் பழையவுரையைக் கட்டறுத்துப் புதுக்கித், தக்கவுதாகரணங்களையுஞ் சேர்த்துக், கற்போர்க் கெளிதே புலப்படுமாறு இடையிடையே வடநூற் கோட்பாடுகளையு மெடுத்து விளக்கிப் பிரித்து அச்சிட்டு வெளிப்படுத்திய உரையாசிரியராகிய புலவரவர்களது திறமையை யார் தாம் வியவார்! இனி நாம் பேசுமாறெடுத்துக் கொண்ட காரிகை விருத்தியுரையைச் சிறிதாராய்வோம்.

இந்நூற்குக் குணசாகரர் செய்த உரையின் வசனமுடிவுகள், படிப்போர் படித்தற்கரிதாகத் தூரத்துச்சென்று முடிதலினாலும் ஏனையர் செய்த வேறுரைகளும் விளக்கற்கரிய காடின்னியபதங்கள் புணர்க்கப்பட்டு முன்னோர் நூலொடு முரணி வழூவமைந்து முன்னுரையினும் விளங்குதற்கரிதேயாய் பாணவகரை மலைவுறச் செய்தலினாலும் அதற்கொரு தெளிவுரை யியற்றுதிரென வேண்டிய யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் புலவர்களது வேண்டுகோட் கிசைந்து ஏறக்குறைய ஒன்பது வருடங்கட்கு முன்னர்ப் புலவரவர்களினாலே ஒரு தெளிவுரையியற்றி வெளிப்படுத்தப்பட்டது. அவ்வுரையினியல்பு, முன்னர் நம்மாலியற்றப்பட்ட அதன் சிறப்புப் பாயிரச்

செய்யுளினாலே நன்றாக அறியத்தக்கது. அந்நூற் கவ்வுரையும் பாப்பிலக்கணத்தை அத்துணைவிரிவாக விளக்கற் கியைந்த தொன்றன்றென் றுற்றுயோசித்துத், தொன்னூலெவற்றையு நன்னராய்ந்து இக்காலத்துக்கேற்ற புதுவிதிகளையும் உதாரணங்களையுஞ்சேர்த்துச், சுருங்கச் சொல்லல் முதலிய பத்தழகுங் குடிகொள்ளுமாறமைத்துப் புத்துரையாகிய ஒருவிருத்தியுரையைப் புலவரவர்கள் இப்பொழுது வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அது பாக்கண் முதலியவற்றின் பெயர்க்காரணங்களைத் தெளிவுற விளக்குகின்றது. விஷயங்களொவ்வொன்றையு நன்றாகப்பிரித்துக்காட்டுகின்றது. காடின்னிய பதங்களின் பொருளை விளக்குகின்றது. முன்னுரைகளொன்றினு மில்லாதனவாய், இக்காலத்துள்ளன வாயுள்ள கட்டளைக்கலித்துறை கட்டளைக்கலிப்பா முதலிய பாக்களுக்கிலக்கணங் கூறுகின்றது. முன்னுரைகாரர்களினாலே சேர்க்கப்படாது விலகி நின்ற "தூங்கேந் தடுக்கு" என்னுங் காரிகையையும், அதனுரையாகிய வண்ணங்களினிலக்கணங்களையுஞ் மிக விசிட்டமாக விளக்குகின்றது. படிப்போருள்ளம் பலவற்றினுஞ் சிதருண்டு பழுதுறாது விஷயத்தை விரைந்து பற்றுமாறு அடைமொழிகட்கும் மகடூஉ முன்னிலை மொழிகட்கும் பொருள்கூறாது விடுத்துச், செய்யுட்களையெல்லாம் விஷயத்துக்கிசைய நிறுத்திப், பத்துதாகரணங்களையுஞ் சேர்த்து விஷயங்களை நன்றாகத் தெளிவுற விளக்குகின்றது. தன்னைவிளக்குதற்கு வேறோராசிரியனை வேண்டாது, கற்போர்க்குத் தானே ஆசிரியனாயமைந்து நீரோட்டம் போன்று செல்கின்றது.

இக்காலத் தேனையர் செய்யும் உரைகளெல்லாம் மிகைபடக்கூறன் முதலிய குற்றங்கணிறைந்துள்ளனவாய், உரைப்பொருளினாராய்ச்சியிற் காலம் போக்கலேயன்றி நூற்பொருளை விரைந்து பற்றுதற்கியலாதனவாய்த் தூரம் போய் மாணாக்கரதுள்ளங்களைத் தடுமாறச்செய்திடர்ப்படுத்துவனவாயின. புலவரவர்களினுரையோ நூலின் றிறவுகோல்போலாகிக், கற்போர் கருத்துக்களை வசீகரித்திழுத்து, வேறுவிஷயத்திற் செல்லவிடாது தடுத்து, நூலோடு சம்பந்தப்பட்ட பிற விஷயங்களையு நணுகியாராயுமாறேவுகின்றது. விஷயங்களை விளக்கற் கின்றியமையாது வேண்டற் பாலனவாகிய பதங்களும்

வாக்கியங்களுமே புணர்க்கப்பட்டு, ஓசை ஆழ முதலியன அமைந்து கிடத்தலாற், பிற்காலத்துரையாசிரியர்களாகிய சிவஞானசுவாமிகள் முதலிய உரையாசிரியர்களுரைபோல நறுஞ்சுவை பயந்து புலவரவர்களது நுண்ணுணர்வை நேரே விளக்குகின்றது. இது விருத்தியுரையேயாயினும், யாப்பிலக்கணத்தைச் சுருக்கி விளக்கி முடித்த நூலாசிரியர் அமிர்தசாகரரைப்போல, விஷயங்களைச் சுருக்கி விளக்குதலே குணசாகரராகிய குமாரசுவாமிப்புலவரவர்களது கருத்துமாமென்பது உரையாராய்ச்சியி னன்கு புலப்படுகின்றது. புலவரவர்கள் இதுபோலவே எஞ்சியுள்ள பொருளிலக்கணமாகிய நம்பியகப்பொருளுக்கும் ஒரு சிறந்த விருத்தியுரை எழுதி முடித்து வைத்திருக்கின்றார்கள். அந்நூலும் இனி விரைவில் வெளிவரும். இங்ஙனமாக, உலகோபகாரமான அரிய பெரிய நூல்களை யியற்றிப் பெரும் புகழ் படைத்த புலவர் சிகாமணியவர்களது அருமை பெருமைகளை நன்கறிந்த வண்ணைச்சைவப்பிரகாச வித்தியாசாலை, மானேசராகிய ஸ்ரீமத்-த. கைலாசபிள்ளையவர்கள், தமது வித்தியாசாலை, மேலும் பெருமைபெற்றோங்குமாறு, அப்புலவர் சிகாமணியவர்களை அதற்குத் தலைமையாசிரியராக நியோகித்திருக்கின்றார்கள். செந்தமிழ்க் கலையறிவு அருகித் தேய்ந்திறு மிக்காலத்து, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், கலைகளெல்லாம் தேய்ந்திறுங் காலாந்தரத்தவற்றைச் சோபானமுறையே வளர்த்துச் சந்திரனை யுய்வித்தவாறு கருணைகூர்ந்து, நம்புலவரவர்களைத் தந்து, நஞ்செந்தமிழ்க்கலையை யொருவாறு தழைத்தோங்குமாறு செய்தவாறே, அப்புலவரவர்கள், நோய்கவலைகளின்றி நிலைத்திருந்து பிரயோசனமமைந்த நூலுரைகளை மேலுஞ்செய்து பயன்றருமாறு அவரதாயுளை நீடிக்கச்செய்தருளும் பொருட்டு அப்பெருமானது திருவருளைப் பிரார்த்தித்து, இனியமையுமென்று கருதி இதனை இத்துணையினிறுத்துகின்றாம்.

இங்ஙனம்,

சு. சரவணமுத்துப்பிள்ளை.

உதயபானு பத்திராதிபர்.

யாப்பருங்கலக்காரிகைப்புத்துரை.

———:o:———

தமிழில் யாப்பிலக்கணநூல்கள் பலவுள. அவற்றுள் மிகப்பழையதாயுள்ளது தொல்காப்பியப்-பொருளதிகாரத்திலுள்ள செய்யுளியல். அதற்குப்பிற்பட்டது யாப்பருங்கலம். அது சமணராற் செய்யப்பட்டது. அதற்கு அங்கமாயுள்ளது யாப்பருங்கலக்காரிகை. இதன் பெயரே இது யாப்பருங்கலத்தின் வழிப்பட்டதென்பதை உணர்த்தும். பழைய தமிழ் யாப்பிலக்கணங்களுள் இறந்தொழியாதுள்ளன இவைகளே. இலக்கணவிளக்கத்தின் செய்யுளியல் சிதம்பரப் பாட்டியல் முதலியன பிற்காலத்தன; இவை, யாப்பருங்கலக்காரிகையின் வழிப்பட்டன.

தொல்காப்பியச் செய்யுளியற்கு மூன்றுரையுள்ளன; அவை உரையாசிரியர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் என்னும் மூவராலும் இயற்றப்பட்டன. இவற்றுள் பேராசிரியருரை முன்னமே அச்சிடப்பட்டுளது; நச்சினார்க்கினியருரை இப்போது 'செந்தமிழில்' அச்சிடப்பட்டு வருகின்றது; இவ்விரண்டிற்கும் முற்பட்டதாய உரையாசிரியருரை இன்னும் அச்சிடப்படவில்லை.

யாப்பருங்கலத்திற்கு யாப்பருங்கல விருத்தி என்று பெயருள ஒரு விரிவுரையுளது. அதுவும் இன்னும் அச்சிடப்படவில்லை.

யாப்பருங்கலக்காரிகைக்கும் பழையதோருரையுண்டு. அது குணசாகரரென்பவராற் செய்யப்பட்டது. இவ்வுரை பல வருஷங்களுக்கு முன் தில்லையம்பூர்ச் சந்திரசேகர கவிராசர், களத்தூர் வேதகிரிமுதலியார் என்பவர்களால் அச்சிடப்பட்டுள்ளது. அவர்கள் அச்சிட்ட புத்தகம் இப்போது கிடைப்பது அரிது. அவற்றைக் கொண்டு பின் தமிழறிவில்லாதவர்களால் வியாபாரநோக்கமாகப் பிழைபட அச்சிட்ட புத்தகங்களே அகப்படும். காரிகைக்குச் சிலவருஷங்களுக்குமுன் யாழ்ப்பாணத்து உடுப்பிட்டி வாசராகிய சிவசம்புப்புலவர் ஒரு புத்துரை எழுதி வெளியிட்டனர். அப்புத்தகமும் இப்போது கிடைப்பது அரிது.

மேற்கே கூறப்பட்ட யாப்பிலக்கணங்களுள் மிகப்பழையதாகிய தொல்காப்பியமும் 'பழையன கழிதலும்' என்னும் நியாயத்திற் கிணங்க வழக்கு வீழ்ந்துவிட்டது. இதற்கு முக்கியகாரணம் அதன் பெருமையும் அருமையும் கொள்கை வேறுபாடுமே. இக்காலத்துத் தொல்காப்பியத்தைக் கற்போரும் கற்பிப்போரும் அரியர். யாப்பருங்கலமும் இப்போது கற்கப்படுவதில்லை. யாப்பருங்கலமுடையார் கொள்கையே இப்போது ஏற்கக்கொள்ளப்படுதலின், அதுகற்கப்படாமைக்குக் காரணம் அந்நூல் உரையுடன் அச்சிடப்படாமையே போலும். இலக்கணவிளக்கச் செய்யுளியலும் சிதம்பரப்பாட்டியலும் சிறப்பின்மையும் நெடுநாள் அச்சில் வாராமையுங் காரணமாகப் பெருவழக்கில் இல்லை. யாப்பருங்கலக்காரிகை ஒன்றுமே யாப்பிலக்கணங் கற்போரால் இப்போது கற்கப்படுவது.

யாப்பருங்கலக்காரிகை சிறுநூலாயினும் மிகச்சிறந்தது. அது யாப்பிலக்கணப் பொருள்களெல்லாம் அடங்க மிகச் சுருங்கின சொல்லால் தொகுத்தும் வகுத்துஞ் செய்யப்பட்டு,உதாரண மெடுத்தோதிச் செல்வமோடு இனிய கட்டளைக்கலித்துறையான் யாக்கப்பட்டு எளிதிற் பாடம்பண்ணிக்கொள்ளற் கேற்றதாயமைந்துளது. இதன் சுருக்கமும் தெளிவும் இனிமையுமே இது யாவராலும் பாராட்டப்படுதற்குக் காரணம்.

இத் தகைய சிறந்தநூல் பிழையற நன்கு அச்சிடப்பட்டுச் செந்தமிழ்கற்போர் கையிற் சேராதிருந்த குறை இப்போது நீங்கிவிட்டது. இக் குறை நீக்கினர் மதுரைச் செந்தமிழ்ச் சங்கத்து ளொருவராகிய நல்லிசைப்புலமை வாய்ந்த யாழ்ப்பாணச் சுன்னாகத்துக் குமாரசுவாமிப்புலவர். இவர் காரிகைக்குக் குணசாகரர் உரைத்த உரையிலுள்ள குறைகளை நீக்கி ஒரு புத்துரை இயற்றியுள்ளார். இவர் ஆசிரியர் அமுதசாகரனார் உய்த்துணரவைத்த பொருணுட்பங்களை எடுத்துக்காட்டி, அவர்கருத்தின்னதென்று புலப்படுத்திச் செல்லுமாறு மிகவும் வியக்கத்தக்கது. இவருரை காரிகைப்பாட்டுக்களை முடிபுதோன்றப் பிரித்துப் பொருளுரைத்து, பொருள் வரையறுத்தற்கின்றியமையாதவைகளை எடுத்துக்கூறி, உதாரணங்களின் இலக்கணவமைதியைத் தெரித்துக்காட்டி, செய்யுளுறுப்புக்கள் முத

லியவற்றின் பெயர்க் காரணங்களைப் புலப்படவிளக்கி, கற்போர் யாப்பிலக்கணப் பொருள்களை நன்கறிந்து கொள்ளற்கேற்றதாயமைந்து கிடக்கின்றது.

இவ்வுரை சென்னபட்டணத்து ஆறுமுகநாவலரவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வித்தியானுபாலன யந்திரசாலையில் பாட்டும், உரையும், விசேடவுரையும், உதாரணமும் கட்பொறியா லுணரப்படுமாறு சிறிதும் பெரிதுமாகிய பல்வகைப்பட்ட எழுத்தில், அழகு பெற நல்ல கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது. இதன்விலை ரூ. 1.

தி. த. கனகசுந்தரம் பிள்ளை.

குறிப்பு.

[illegible] பார்வைக்குத் தமிழ்மக்கள் சிலரால் புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவை, ஸ்ரீ: விவேகானந்த விஜயம், இந்தியா கவர்ன்மெண்டின் திருத்தங்கள், யசோதரகாவியம், வியாசபாரத முதற்சஞ்சிகை, யாப்பருங்கலக் காரிகையுரை, கன்னியாகுமரித் தலபுராணம் முதலியவை. என் சொந்த வேலைகளினிமித்தம் சிலகாலமாக நான் ஊரி லில்லாதிருக்க நேரிட்டதால் நண்பர்கள் இப்புத்தகங்களைப் பற்றிய அபிப்பிராயங்கள் காலத்தில் வெளிவராமல் நேர்ந்ததாக நினைத்துப் பொறுப்பார்களென்று நம்புகிறேன்.

ORIENTAL MANUSCRIPTS

பத்திராசிரியர்